بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

சீரத்துன் நபி (ஸல்) சிறப்பிதழ்

தொகுதி 5
வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ்

Weekly **BADAR** Qadian TAMIL


இதழ் 33
ஆசிரியர் O.M. முஹம்மது அஹ்மது
துணை ஆசிரியர் அ. கலீல் அஹ்மது

Postal Reg. No. GDP/39/2020-22    22 துல்ஹஜ் 1441 ஹிஜ்ரி கமரி 13 ஸஹூர் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி 13 ஆகஸ்ட் 2020

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“இறை இல்லமான கஅபா பௌதீக ரீதியில் உண்மையான இறை நேசர்களுக்காக ஒரு முன்மாதிரியாக வைக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இறைவன் கூறுகின்றான். பாருங்கள்! இது எனது வீடாகும். இந்த கருப்புக் கல் எனது வீட்டின் தலைவாசலில் உள்ள மூலைக்கல் ஆகும். இத்தகைய கட்டளையை அவன் பிறப்பித்ததற்கான காரணம், மனிதன் பௌதீகமான முறையில் தனது பேரன்பை, நேசத்தை உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஆகும். எனவே, ஹஜ் செய்யக் கூடியவர்கள் ஹஜ் செய்யும் இடத்தில் பௌதீகமான முறையில் இந்த வீட்டை வலம் வருகின்றனர். அவர்கள் எத்தகைய நிலையில் தங்களை ஆக்கிக் கொள்கின்றார்கள் என்றால் இறைவன் மீதுள்ள அன்பில் அவர்கள் பைத்தியக்காரர்களைப் போன்று இருக்கின்றனர். அவர்கள், அவனது அன்பில் திளைத்துக் காணப்படுகின்றனர்.”

(செஷ்மா ம.்.ரு.்.பத், ரூஹானி கஸாயீன் தொகுதி 23 பக்கம் 100)



Printed

# அவரது பெயர் முஹம்மது. எனது உள்ளத்தில் நிறைந்திருப்பவர் அவரே!

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரிகள்**

وہ پیشوا ہمارا جس سے ہے نُور سارا
نام اُس کا ہے محمد دلبر مرا یہی ہے

அவரே எனது தலைவர்! ஒளிகள் அனைத்தையும் அவரிடமிருந்தே பெற்றோம். அவரது பெயர் முஹம்மது எனது உள்ளத்தில் நிறைந்திருப்பவர் அவரே!

سب پاک ہیں پیمبر اِک دوسرے سے بہتر
لیک از خدائے برتر خیرالورٰی یہی ہے

அனைத்து தூதர்களும் தூயவர்களே. அவர்களில் ஒருவர் மற்றவர்களை விட சிறந்தவர். ஆனால் மேன்மைமிக்க இறைவனின் பார்வையில் படைப்பினங்களில் சிறந்தவர் முஹம்மது (ஸல்) அவர்களே ஆவார்கள்.

پہلوں سے خوب تر ہے خوبی میں اِک قمر ہے
اُس پر ہر اک نظر ہے بدرالدّجیٰ یہی ہے

முன் சென்றவர்களை விட சிறந்தவர். சிறப்பில் ஒரு நிலவைப் போன்றவர். ஒவ்வொரு பார்வையும் அவர் மீது இருக்கின்றது. ஒளி வீசும் முழு நிலவு அவர்களே ஆவார்கள்.

وہ یارِ لامکانی وہ دلبرِ نہانی
دیکھا ہے ہم نے اُس سے بس رہنما یہی ہے

எல்லையற்ற இறைவனின் அன்பராக அவர் இருக்கின்றார். மறைவாக இருக்கின்ற இறைவனின் நேசராக இருக்கின்றார். அவர் மூலமாகவே நாம் பார்க்கின்றோம். வழிகாட்டி அவர்களே ஆவார்கள்.

وہ آج شاہِ دیں ہے وہ تاجِ مرسلیں ہے
وہ طیّب و امیں ہے اُس کی ثنا یہی ہے

அவரே இன்று மார்க்கத்தின் அரசர் ஆவார். தூதர்களின் சிகரமும் ஆவார். அவர் தூயவர் ஆவார். நம்பிக்கைக்கு உரியவரும் ஆவார். அவரது புகழ் இதுவே ஆகும்.

اُس نُور پر فدا ہوں اُس کا ہی مَیں ہوا ہوں
وہ ہے مَیں چیز کیا ہوں بس فیصلہ یہی ہے

அந்த ஒளிக்காக நான் என்னை அர்ப்பணித்து விட்டேன். அவருக்காகவே நான் வந்துள்ளேன். அவர்தான் அனைத்தும். நான் எம்மாத்திரம். தீர்ப்பு இதுவே ஆகும்.

❁❁❁

பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1 |
| 2. | திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியிலிருந்து | 2 |
| 3. | ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து... | 3 |
| 5. | ஹுஸூர் அவர்கள் ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் இறுதிய அமர்வில் நிகழ்த்திய சொற்பொழிவு | 4 |
| 5. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு | 14 |
| 6. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகச்சிறந்த ரஸூல் என்ற ஒளியில் | 21 |


لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சஹாபியின் பெயர் நுஅய்மான் பின் அமர் (ரலி) ஆகும். அன்னார் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் 70 அன்ஸார்களுடன் கலந்து கொண்டார்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நுஅய்மான் அவர்களைப் பற்றி நன்மையைத் தவிர வேறு எதுவும் கூறாதீர்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் மீதும், அவனது ரஸூலின் மீதும் அன்பு வைத்துள்ளார்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு காட்டரபி வந்தார். மேலும் பள்ளிவாசலுக்குள் வந்ததும் தமது ஒட்டகத்தை முற்றத்தில் அமர்த்தினார். அப்போது சில சஹாபாக்கள் ஹஸ்ரத் நுஅய்மான் அவர்களிடம், நீங்கள் இந்த ஒட்டகத்தை அறுத்து விட்டால் நாம் அதை உண்போம். ஏனென்றால் எங்களது உள்ளம் மாமிசம் உண்ண விரும்புகிறது. ஆனால் இது காட்டரபியின் ஒட்டகமாகும். அவர் புகார் செய்வார். பெருமானார் (ஸல்) அவர்களிடம் புகார் சென்றால் பிறகு அன்னார் அதற்குரிய விலையை கொடுத்து விடுவார்கள் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நுஅய்மான் அவர்கள் அவர்களது பேச்சைக் கேட்டு அந்த ஒட்டகத்தை அறுத்து விட்டார். பிறகு அந்த காட்டரபி வெளியே வந்தபோது தமது ஒட்டகத்தை இந்நிலையில் கண்டு, முஹம்மதே (ஸல்)! எனது ஒட்டகம் அறுக்கப்பட்டு விட்டது என்று மிகவும் கூச்சலிட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள். மேலும், யார் இதனை செய்தார்கள் என்று கேட்டார்கள். அதற்கு நுஅய்மான்தான் என்று மக்கள் கூறினர்.

எனவே அன்னார் அவரைத் தேடிச் சென்றார்கள். எனவே நுஃமான் ஒளிந்து கொண்டார்கள். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரைத் தேடிச் சென்றார்கள். இறுதியில் ஹஸ்ரத் ஸுபாஆ பின்த் ஸுபைர் பின் அப்துல் முத்தலிபின் ஒளிந்திருப்பதைக் கண்டார்கள். எங்கு அவர்கள் ஒளிந்து கொண்டார்களோ அங்கு ஒரு நபர் தமது விரலை நுஅய்மான் அவர்களின் பக்கம் சைகை செய்தவாறு, யா ரஸூலல்லாஹ் எனக்கு அவர் எங்கு இருக்கின்றார்? என்பது தெரியவில்லை என்று கூறினார்.

எவ்வாறிருப்பினும் பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை அங்கிருந்து வெளியே வரச் செய்தார்கள். மேலும் இந்த செயலை நீங்கள் ஏன் செய்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நுஅய்மான் அவர்கள், நபிகள் நாயகமே! நான் இதனை அறுத்து விட்டேன் என்று எந்த மக்கள் உங்களிடம் இது குறித்து தகவல் தந்தார்களோ அவர்களே என்னை தூண்டினார்கள். அவர்கள்தான் என்னிடம், இதற்குரிய கூலிலை பெருமானார் (ஸல்) அவர்கள் கொடுத்து விடுவார்கள் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் நுஅய்மான் அவர்களது முகத்தை தமது கரங்களால் தடவினார்கள். மேலும் புன்முறுவல் செய்தார்கள். மேலும் அன்னார் அந்த காட்டரபிக்கு அந்த ஒட்டகத்தின் விலையைக் கொடுத்து விட்டார்கள்.

மதீனாவிற்கு வெளியே இருந்து எப்போது வியாபாரி வந்தாலும் ஹஸ்ரத் நுஅய்மான் அவர்கள் அவரிடமிருந்து எதையாவது பெருமானார் (ஸல்) அவர்களுக்காக வாங்கி விடுவார்கள். மேலும் அதனை அன்னாரிடம் கொண்டு வந்து, இது என் தரப்பிலிருந்து உங்களுக்கு அன்பளிப்பாகும் என்று கூறுவார்கள். அந்த பொருளின் எஜமானர் ஹஸ்ரத் நுஅய்மான் அவர்களிடம் அதற்கான தொகையை வாங்க வரும்போது அவர் அந்த வியாபாரியை பெருமானார் (ஸல்) அவர்களிடம் அழைத்துக் கொண்டு வந்து, நான் உங்களுக்காக வாங்கிக் கொடுத்த அந்த பொருளின் விலையை இவருக்கு கொடுங்கள் என்று கூறுவார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் இந்தப் பொருளை எனக்கு அன்பளிப்பாக கொடுக்கவில்லையா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர், நபிகள் நாயகமே! இறைவன் மீது ஆணையாக! இந்தப் பொருளுக்கான தொகையை செலுத்த என்னிடம் எந்த தொகையும் இல்லை. ஆனால் அந்தப் பொருள் உண்பதற்கான பொருளாக இருந்தால் தாங்கள் அதை உண்ண வேண்டும். மேலும் அது வைத்துக் கொள்வதற்கான பொருள் என்றால் பிறகு நீங்கள் அதை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பமாக இருந்தது என்று கூறினார்கள். இதனைக்கேட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். மேலும் இந்தப் பொருளின் எஜமானருக்கு அதற்குரிய தொகையை செலுத்துவதற்கான கட்டளையை பிறப்பித்தார்கள். (குத்பா ஜுமுஆ 13 செப்டம்பர் 2019)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்தஅரபு நாட்டைச் சார்ந்த முஹம்மது என்னும் பெயருடைய (ஆயிரமாயிரம் அருட்களும், சாந்தியும் அவர்களுக்கு இருப்பதாக) தீர்க்கதரிசி எவ்வளவு உயர்வான தகுதியினைக் கொண்ட தீர்க்கதரிசியாவார்கள் என நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அவருடைய உயரிய நிலையின் எல்லையைக் கண்டறிய முடியாது. அவருடைய தூய குணயியல்புகளின் தாக்கத்தை கணக்கிடுவது மனிதனின் வேலையன்று. பிரித்தறிய வேண்டிய முறையில் அவரின் உயர் பதவியினைப் பிரித்தறியப்படவில்லை என்பது வருந்தத்தக்கதே. உலகிலிருந்து மறைந்த அந்த ஓரிறைமையை (தவ்ஹீதை) மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தவர் அவ்வீரர் ஒருவரே. அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தினால் அவரது உயிரே உருகி விட்டது. அதனால்தான் அவரின் உள்ளத்தின் இரகசியத்தை அறிந்திருந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும் – முன்னவர் பின்னவர் யாவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவரின் குறிக்கோள்களை அவரது வாழ்நாளிலேயே நிறைவேற்றினான்.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 118)

(மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர்)

# திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்தான அந்தஸ்து

إِنَّ الَّذِينَ يُبَايِعُونَكَ إِنَّمَا يُبَايِعُونَ اللَّهَ يَدُ اللَّهِ فَوْقَ أَيْدِيهِمْ

பொருள்: உம்மிடம் உடன்படிக்கை செய்து கொள்பவர்கள் அல்லாஹ்விடமே உடன்படிக்கை செய்கின்றனர். அல்லாஹ்வின் கை அவர்களின் கைகளின் மேல் இருக்கிறது. **(48:11)**

وَمَا رَمَيْتَ إِذْ رَمَيْتَ وَلَٰكِنَّ اللَّهَ رَمَىٰ
وَلِيُبْلِيَ الْمُؤْمِنِينَ مِنْهُ بَلَاءً حَسَنًا إِنَّ اللَّهَ سَمِيعٌ عَلِيمٌ

பொருள்: நீர் எறிந்தபோது நீர் எறியவில்லை. மாறாக, அல்லாஹ்வே எறிந்தான். அவன் நம்பிக்கையாளர்களுக்குத் தன்னிடமிருந்து மேலான நன்மை செய்வதற்கே (அவ்வாறு செய்தான்). நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். **(8:18)**

مَنْ يُطِعِ الرَّسُولَ فَقَدْ أَطَاعَ اللَّهَ وَمَنْ تَوَلَّىٰ
فَمَا أَرْسَلْنَاكَ عَلَيْهِمْ حَفِيظًا

பொருள்: திருத்தூதருக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு விட்டார் (எனப் புரிந்து கொள்க). புறக்கணித்து விட்டவர்களுக்கு உம்மை நாம் கண்காணிப்பவராக அனுப்பவில்லை (என்பது நினைவிலிருக்கட்டும்). **(4:81)**

فَكَانَ قَابَ قَوْسَيْنِ أَوْ أَدْنَىٰ

பொருள்: அவர் இரண்டு விற்களுக்குரிய ஒன்றுபட்ட நாணைப் போன்றவராக அல்லது அதைவிடவும் மிக நெருக்கமானவராக ஆகிவிட்டார். **(53:10)**

يَا أَيُّهَا النَّاسُ قَدْ جَاءَكُمْ بُرْهَانٌ مِنْ
رَبِّكُمْ وَأَنْزَلْنَا إِلَيْكُمْ نُورًا مُبِينًا

பொருள்: மக்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்குத் தெளிவானதொரு சான்று வந்து விட்டது. மேலும் நாம் உங்களுக்குத் தெளிவான ஓர் ஒளியினையும் இறக்கியுள்ளோம். **(4:175)**

نُورٌ عَلَىٰ نُورٍ يَهْدِي اللَّهُ لِنُورِهِ مَنْ يَشَاءُ
وَيَضْرِبُ اللَّهُ الْأَمْثَالَ لِلنَّاسِ وَاللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

பொருள்: ஒளி அது பல ஒளிகளின் ஒளிப்பிழம்பாக இருக்கிறது. அல்லாஹ் தான் நாடுபவர்களைத் தன் ஒளியின்பால் வழிகாட்டுகின்றான். மேலும் அல்லாஹ் மக்களுக்கு (தேவையான) எடுத்துக்காட்டுகளை(க் கூறி) விளக்குகின்றான். மேலும் அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கு அறிபவனாவான். **(24:36)**

يَا أَهْلَ الْكِتَابِ قَدْ جَاءَكُمْ رَسُولُنَا يُبَيِّنُ لَكُمْ كَثِيرًا مِمَّا كُنْتُمْ
تُخْفُونَ مِنَ الْكِتَابِ وَيَعْفُو عَنْ كَثِيرٍ قَدْ جَاءَكُمْ مِنَ اللَّهِ
نُورٌ وَكِتَابٌ مُبِينٌ

பொருள்: வேதத்தையுடையவர்களே! நம்முடைய தூதர் உங்களிடம் வந்து விட்டார். வேதத்திலிருந்து நீங்கள் மறைத்தவற்றுள் பெரும்பாலானவற்றை அவர் உங்களுக்கு விளக்குகின்றார். பெரும்பாலான குற்றங்களையும் மன்னிக்கின்றார். நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும், மிகத் தெளிவான ஒரு வேதமும் வந்துள்ளன. **(5:16)**

......☆......☆......☆......

ஹஸ்ரத் அபூ சயீத் அல் குத்ரி கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் (வாழ்க்கை மிகவும் எளிதானது. எந்த வேலையையும் அவமானமாக அவர்கள் கருதவில்லை) அவர்கள் தமது ஒட்டகங்களுக்கு தானாகவே உணவளித்தார்கள். வீட்டு வேலைகளைச் செய்வார்கள். அவர்கள் தனது காலணிகளை சரி செய்வார்கள். துணிகளை தைப்பார்கள். ஆடுகளில் பால் கரப்பார்கள். அவர்கள் வேலைக்காரனை தம்முடன் அமர்த்தி உணவளிப்பார்கள். மாவு அரைத்து அரைத்து அவர் சோர்வடைந்தால் அவருக்கு உதவுவார்கள். கடை வீதிகளிலிருந்து வீட்டுப் பொட்களைக் கொண்டு வருவதற்கு வெட்கப்பட மாட்டார்கள். பணக்காரர்களிடமும் ஏழைகளிடமும் கைகுலுக்குவார்கள். சலாம் கூறுவதில் முந்திக் கொள்வார்கள்.

ஒரு சாதாரண பேரீத்தம் பழத்தை வழங்குவதற்கான விருந்திற்காக அழைத்தாலும் அதனை ஏளனமாக கருத மாட்டார்கள். அவர்கள் மிகவும் அனுதாபம் கொண்டவர்களாகவும், மென்மையாளராகவும் இருந்தார்கள். அவர்களது வாழ்கை முறை மிகவும் தூய்மையாக இருந்தது. மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். அவர்களது முகத்தில் ஒரு ஒளி இருந்தது. உரத்த குரலில் சிரிக்க மாட்டார்கள். இறைவனுக்கு அஞ்சுவதைப் பற்றி கவலைப்பட்டார்கள். அவர்கள் ஒரு தாழ்மையான மனநிலையைக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களிடம் பலவீனம் பற்றிய குறிப்பு கூட இல்லை. அவர்கள் கொடை வள்ளலாக இருந்தார்கள். ஆனால் வீணாக செலவு செய்ய மாட்டார்கள். மென்மையானவராகவும், கருணையாளராகவும், தாராளமானவராகவும் திகழ்ந்தார்கள். ஒவ்வொரு முஸ்லிமிடமும் கருணையுடன் நடந்து கொள்வார்கள். அவர்கள் வயிறு புடைக்கும் அளவுக்கு சாப்பிடவில்லை. அவர்கள் பேராசையின் உணர்வால் கையை நீட்ட மாட்டார்கள். மாறாக, பொறுமையாகவும், நன்றியுணர்வோடும், குறைவாகவும் உள்ளடக்கமாக இருப்பார்.

**(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 29... ஹதீகத்துஸ் சாலிஹீன் ஹதீஸ் எண் 43)**

**திருநபி (ஸல்) அவர்கள் முழு உலகையும் இருள் சூழ்ந்ததாகக் கண்டார்கள். பின்னர் அன்னாரின் வருகையால் அந்த இருள் ஒளியாக மாறியது. பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சமூகத்தில் தோன்றினார்களோ அச்சமூக மக்கள் இணை வைத்தலெனும் ஆடையை களைந்து, ஓரிறைக் கொள்கை எனும் ஆடையை அணியும் வரை அவர்கள் இவ்வுலகை விட்டுச் செல்லவில்லை**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

நம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்தக்கூடிய ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாகத் தோன்றி மறைந்துபோன உண்மையை மீண்டும் உலகிற்கு தந்தார்கள். இந்தப் பெருமையில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் வேறு எந்த நபிக்கும் பங்கில்லை. திருநபி (ஸல்) அவர்கள் முழு உலகையும் இருள் சூழ்ந்ததாகக் கண்டார்கள். பின்னர் அன்னாரின் வருகையால் அந்த இருள் ஒளியாக மாறியது. பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சமூகத்தில் தோன்றினார்களோ அச்சமூக மக்கள் இணை வைத்தலெனும் ஆடையை களைந்து, ஓரிறைக் கொள்கை எனும் ஆடையை அணியும் வரை அவர்கள் இவ்வுலகை விட்டுச் செல்லவில்லை.

அதுமட்டுமின்றி, அம்மக்கள் நம்பிக்கையின் மிக உயர்ந்த நிலையை எய்தினர். உலகில் எப்பகுதியிலும் காண முடியாத ஈடு இணையற்ற முறையில் நம்பிக்கை, நன்றி, உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த செயல்கள் அவர்களால் நிகழ்த்தப்பட்டன. இப்படிப்பட்ட மாபெரும் வெற்றியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த இறைத்துதரும் பெறவில்லை.

இது ஒன்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு ஒரு மாபெரும் சான்றாகும். அதாவது அந்த காலத்தில் மூழ்கியிருந்த உலகம், இயல்பாகவே ஒரு மாபெரும் சான்றாகும். அதாவது அந்த காலத்தில் மூழ்கியிருந்த உலகம், இயல்பாகவே ஒரு மாபெரும் மார்க்க சீர்திருத்தவாதியை எதிர்பார்த்திருந்த காலத்தில் அவர்கள் தோன்றினார்கள்.

பின்னர் இலட்சக்கணக்கான மக்கள் இணைவைத்தல், சிலை வணக்கம் ஆகியவற்றைக் கைவிட்டு, ஓரிறைக் கொள்கையையும், நேர்மையையும் கடைபிடித்த பின்னரே, பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வுலகிலிருந்து சென்றார்கள். உண்மையில், இந்த முழுமையான சீர்திருத்தம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கே உரியதாகும்.

அதாவது காட்டு விலங்குகளின் குணங்களும், மிருக இயல்புகளும் உடையவர்களாக இருந்த சமுதாய மக்களுக்கு மனித குணங்களையும், பழக்க வழக்கங்களையும் கற்றுத் தந்தார்கள். இன்னொரு வகையில் கூறுவதென்றால், விலங்குகளை மனிதராக்கி, பின்னர் அவர்களைச் சிறந்த அறிவுடையோராக்கினார்கள்.

அதன் பின்னர் அந்த அறிவுடைய மக்களை இறையடியார்களாக மாற்றி, ஆன்மீகத் தன்மையை அவர்களுள் ஊதினார்கள். அதன் மூலம் உண்மையான இறைவனுடன் அம்மக்களுக்குத் தொடர்பை ஏற்படுத்தித் தந்தார்கள். இறை வழியில் அவர்கள் ஆடுகளைப் போன்று அறுக்கப்பட்டனர்; எறும்புகளைப் போன்று காலடியின் கீழ் நசுக்கப்பட்டனர். இருந்தபோதிலும் எந்நிலையிலும் அம்மக்கள் தங்கள் நம்பிக்கையை விட்டுவிடவில்லை. மாறாக, ஒவ்வொரு சோதனையிலும் முன்னேறிச் சென்றனர்.

எனவே ஆன்மீகத்தை உலகில் நிலைநாட்டுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டாவது ஆதமாக விளங்கினார்கள்; அல்ல, உண்மையான ஆதம் அவர்களாகவே இருந்தார்கள்.


ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மனிதச் சிறப்புகள் அனைத்தும் முழுமை பெற்றன. மனிதனிடத்திலுள்ள நல்லாற்றல்கள் அனைத்தும் செயல்களில் ஈடுபடுத்தப்பட்டன. மனித இயல்பின் எந்தக் கிளையும் கனி தராமல் இருக்கவில்லை. அவர்களுடைய கத்மே நுபுவ்வத், காலத்தின் இறுதி காரணமாக மட்டுமே என்றில்லாமல், நபித்துவத்தின் அனைத்துச் சிறப்புகளையும் முழுமையாக கொண்டதாக இருந்தது.

நாயகம் (ஸல்) அவர்கள் இறைப் பண்புகளின் முழுமையான தோற்றமாக விளங்கினார்கள். எனவே அவர்களுடைய ஷரீஅத் ஆற்றல்மிக்கதாவும், மென்மையானதாகவும் இருவித பண்புகள் கொண்டதாக விளங்கிற்று. இதுவே அன்னாரின் முஹம்மது என்ற பெயருக்கும், அஹ்மது என்ற பெயருக்கும் காரணமும் ஆகும். நாயகம் (ஸல்) அவர்களுடைய நபித்துவத்தின் எப்பகுதியிலும் குறைவிருந்ததில்லை. மாறாக அவர்களுடைய நபித்துவம் ஆரம்பத்திலிருந்தே முழு உலகிற்கும் உரியதாக விளங்கியது.

(லெக்சர் சியால்கோட், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 206)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

நமது நபி (ஸல்) அவர்களிடமிருந்து வெளிப்பட்டது போன்று வேறு எந்த நபியிடமிருந்தும் இந்த அளவு அற்புதங்கள் வெளிப்பட்டதில்லை. ஏனென்றால், முந்தைய நபிமார்களின் அற்புதங்கள் அவர்கள் மரணித்ததோடு மரணித்து விட்டன. ஆனால் நமது நபி (ஸல்) அவர்களது அற்புதங்கள் இதுவரை வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை கியாமத் வரை வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.

(ததிம்மா ஹகீக்கத்துல் வஹீ பக்கம் 35)

**உலகம் எஞ்சியிருப்பதற்கு இன்று இஸ்லாமிய போதனையின் தேவை உள்ளது**

**உலகிற்கு இஸ்லாத்தின் அழகிய போதனையை எடுத்து வைப்பதற்காக ஒவ்வொரு அஹ்மதியும் தமது பங்களிப்பை அளிக்க வேண்டியது அவசியமாகும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த முன்மாதிரியிலிருந்து இஸ்லாத்தின் அசல் போதனைகளை எடுத்து வைத்தல். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு அன்னார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையின்படி செயலாற்றி உலகிற்கு இஸ்லாத்தின் அசல் முகத்தை முன்வைக்குமாறு அறிவுரை**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒப்பற்ற உயர் நல்லொழுக்கம், இறை வணக்கம், ஜமாஅத்தான தொழுகையைப் பேணுதல், அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை, பணிவு, தயை கூர்தல் மற்றும் நன்றியுணர்வு, அமானிதம் மற்றும் வாக்குறுதியைப் பேணிக்காத்தல், நடுநிலையை கடைபிடித்தல் மற்றும் அன்னாரின் அழகைப் பற்றிய மனம் கவரும் கூற்றுகள்**

**அல்லாஹ் நமக்கு அந்த முழுமையான நபியின் உம்மத்தில் இணைந்தவர்களுக்குரிய உரிமையை செலுத்துபவர்களாக ஆக்குவானாக. அந்த அழகிய மற்றும் பிரகாசமான முகத்தை உலகின் முன்னால் எடுத்து வைத்து உலகின் இருளை நீக்குபவர்களாக ஆகுவோமாக. அல்லாஹ் நமக்கு அதற்கான வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஜெர்மனியின் கார்லஸ்ரூயேவில் 5-7 ஜுலை 2019 இல் நடைபெற்ற 44வது ஆண்டு மாநாட்டின் நிறைவு அமர்வில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபதுல் மஸீஹ் (அய்) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு**

**சொற்பொழிவின் இந்த மூலத்தை பதர் குழுமத்திற்கும் அல் ஃபஸ்ல் இன்டர்நே-னல் இலண்டன் குழுமத்திற்கும் நன்றி கூறியவாறு வெளியிடப்படுகின்றது**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ كَانَ يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْآخِرَ وَذَكَرَ اللّٰهَ كَثِيْرًا

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் (சந்திக்கப் போவதை) எதிர்பார்த்து, அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுகின்ற உங்களுக்கு, அல்லாஹ்வின் திருத்தூதுதரிடத்து மிக மேலான முன்மாதிரி உண்டு. (33:22)

முஸ்லிமல்லாத உலகில் அல்லது மேற்கத்திய உலகில் அல்லது முன்னேறிய உலகில் முஸ்லிம்கள் தொடர்பாக (அவர்களிடமிருந்து தங்களை) தற்காத்துக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. அவர்களுக்கு இஸ்லாமிய போதனைகளைப் பற்றிய குறைவான அறிவு இருப்பதால் அந்நிலை அதிகமாக உள்ளது. அதில் சில முஸ்லிம்களின் இஸ்லாத்தின் பெயரால் கடுமையான செயல் மற்றும் பயங்கரவாதம், சட்டத்தை தங்களின் கைகளின் எடுத்துக்கொண்டு செயல்படுவது ஆகியவை மென்மேலும் அவர்களின் உள்ளங்களில் இஸ்லாம் பயங்கரவாத மதம்தானே என்று பதியவைத்து விட்டது. இன்று இஸ்லாத்தின் போதனைகளை உலகில் பரப்பவும், இஸ்லாமிய போதனைகள் பற்றிய தவறான தாக்கத்தை அகற்றும் பணியை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடிமையாகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் ஜமாஅத்தின் பொறுப்பில் விட்டுள்ளான். எனவே இதற்காக ஒவ்வொரு அஹ்மதியும் முழுமையாக முயற்சி செய்யவேண்டியது அவசியமாகும். உலக மக்கள் பத்திரிகை மற்றும் ஊடக செய்திகளைக் கேட்டுவிட்டு அதாவது அவை இவற்றை கூறுகின்றன, பத்திரிகை கூறுபவற்றையே நூறு சதவிகிதம் உண்மையென நினைக்கின்றார்கள். மார்க்கத்துடனான ஈடுபாடு இவ்வாறே பொதுவாக உலகின் பெருவாரியான மக்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

எனவே இப்படிப்பட்ட சூழலில் மிகக்கடுமையான உழைப்புடன் தொடர் முயற்சியால் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை உலகிற்கு கூறுவது என்பது ஒரு மிகப்பெரிய சவாலான விஷயமாகும். பொதுவான முஸ்லிமல்லாதவர்கள் முஸ்லிம்களின் இச்செயல் அவர்களின் போதனையின் காரணமாகவேயாகும், மேலும் இஸ்லாத்தின் நிறுவனர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயலின் விளைவாகவே முஸ்லிம்களின் இச்செயல் நிகழ்கிறது என நினைக்கின்றார்கள்.

எனவே நான் கூறியதைப்போன்று இந்த தாக்கத்தை அகற்றவும் உலகிற்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளை தெரிவிக்கவும் ஒவ்வொரு அஹ்மதியும் தத்தமது பங்களிப்பைச் செலுத்தவேண்டியது அவசியமாகும். தமது சொல் மற்றும் செயலால், இஸ்லாத்தின் உண்மையான போதனை என்ன, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல் என்ன என்பதை உலகிற்கு கூறவேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் உலகில் மனிதனைப் படைத்திருப்பது அவன் இறை வணக்கத்தின் உரிமையையும் செலுத்த வேண்டும், அடியார்களின் உரிமையையும் செலுத்த வேண்டும் என்பதற்கேயாகும். எவர்கள் அல்லாஹ்வின் உரிமையை செலுத்துபவர்களாக இருப்பார்களோ அவர்கள் நிச்சயமாக

அடியார்களின் உரிமையையும் செலுத்துபவர்களாகவே இருப்பார்கள். மேலும் அவர்களின் உரிமைகளைச் செலுத்துவதற்கு அல்லாஹ் நமக்கு முன்னால் தனது அன்பிற்கும் நேசத்திற்கும் உரிய நபியும் பின்பற்றப்பட வேண்டியவரும் முழுமையான மனிதருமாகியவரின் முன்மாதிரியை வைத்துள்ளான்.

பிறகு நமக்கு கூறியுள்ளான்: இந்த முழுமையான முன்மாதிரி உங்களுக்கு வழிகாட்டியாகும். அன்னாரின் உம்மத்தைச் சார்ந்தவராக வாதிப்பவர்கள் இதனைக் கைக்கொள்ளுங்கள். இந்த உயர் முன்மாதிரியின் ஒவ்வொரு பகுதியின்படியும் செயல்பட முயற்சி செய்யுங்கள். பிறகு உலகிற்கு கூறுங்கள், உண்மை இஸ்லாம் இதுவாகும். இஸ்லாத்தின் பெயரால் பயங்கரவாதிகள் முன்வைக்கும் அந்த இஸ்லாம் இல்லை. அவற்றை மேற்கத்திய ஊடகங்கள் மேலும் மேலும் மிகைப்படுத்தி கூறிவருகின்றன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு முன்னால் எப்படி எப்படிப்பட்ட அழகிய உதாரணங்களையெல்லாம் தமது உயர் நடத்தையால் முன்வைத்துள்ளார்கள். அவற்றின் சில பகுதிகளை இந்நேரம் முன்வைப்பேன். அவற்றிலிருந்து நாம் அன்னாரின் அந்த முன்மாதிகளை அறியலாம். மேலும் உயர் நல்லொழுக்கத்தின் ஒளியில் அன்னார் நமக்கு போதித்தவற்றை ஆராயலாம். எந்த முன்மாதிரியை காண்பித்தார்களோ அவற்றின் அடிப்படையில் அன்னாரைப் பார்க்க வேண்டும். நாம் இதன் அடிப்படையில் நமது வாழ்க்கையை நடத்துகின்றபோதுதான் உண்மையில் இஸ்லாம் என்ன பொருள் என்பதை உலகிற்கு கூற முடியும்.

உலகம் எஞ்சியிருப்பதற்கு இன்று இஸ்லாமிய போதனையின் தேவை உள்ளது. அல்லாஹ் மனித வாழ்வின் அசல் குறிக்கோளாக இறை வணக்கத்தைக் கூறியுள்ளான். நமது எஜமானர் (ஸல்) அவர்களும் நமக்கு இதனை மட்டும் கூறவில்லை அதாவது உங்களது வாழ்வின் குறிக்கோள் அல்ாஹ்வை வணங்குவதாகும்.

எனவே இறைவணக்கத்தின் பக்கம் அனைத்து முஃமின்களும் கவனம் செலுத்த வேண்டும். இந்த குறிக்கோளை அடைய முயற்சிக்க வேண்டும் என அல்லாஹ் கூறுவதாக கூறவில்லை. மாறாக அன்னார் தமது இறைவணக்கத்தில் தரத்தை நிலைநாட்டியவாறு நமக்கு முன்வைத்தார்கள். அவை ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டதற்கான உறுதிப் பத்திரத்தையும் அல்லாஹ் வழங்கினான்.

எவ்வாறெனில் அல்லாஹ் கூறுகின்றான்:

الَّذِيْ يَرٰىكَ حِيْنَ تَقُوْمُ ۙ وَتَقَلُّبَكَ فِي السّٰجِدِيْنَ

அதாவது நீர் (தனிமையில் தொழுவதற்காக) நிற்கும்போது அவன் உம்மைக் காண்கின்றான். சிரம் பணிந்து வணங்கும் கூட்டத்தினருள் நீர் இங்குமங்கும் செல்வதையும் (அவன் காண்கின்றான்). (26:219-220)

எனவே இது அன்னாரின் சஜ்தாக்கள் மற்றும் இறைவணக்கங்களின் நிலையாக இருந்தது. நிம்மதியற்ற நிலையில் எந்தளவிற்கு அதிகரித்து காணப்பட்டார்கள் என்றால் அல்லாஹ் தனது அன்பின் பார்வைக்கொண்டு குறிப்பாக அன்னாரின் அந்த இறைவணக்கம் மற்றும் நிம்மதியின்மையைக் குறிப்பிடுகின்றான். இந்த நிம்மதியின்மை எதற்காக இருந்தது, யாருக்காக இருந்தது? இந்த நிம்மதியின்மை மற்றும் துஆக்கள் தமது உம்மத்திற்காக இருந்தது. இந்த நிம்மதியின்மை மற்றும் துஆக்கள் மனித இனத்திற்காக இருந்தது. இந்த நிம்மதியின்மை மற்றும் துஆக்கள் இறைவனிடமிருந்து தூரமாகி இருக்கும் அந்த மக்கள் தாங்கள் படைக்கப்பட்டதன் நோக்கத்தை புரிந்து கொள்வதற்காக இருந்தது. ஏனென்றால் இந்த தூரங்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு காரணமாக ஆக்கிவிடக்கூடும். எனவே அன்னாரின் இந்த நிம்மதியின்மையைப் பார்த்து அல்லாஹ் அன்னாரிடம் கூறினான்:

لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ اَلَّا يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ

அதாவது அவர்கள் நம்பிக்கையாளர்கள் ஆகவில்லை என்பதற்காக நீர் ஒருவேளை உம் உயிரையே மாய்த்துக்கொள்வீர் போலும். (26:4)

உமது உள்ளம் நிராகரிப்பாளர்கள் ஏன் நேர்வழி பெறுவதில்லை, ஏன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு தனது இம்மையையும் மறுமையையும் சரிசெய்து கொள்வதில்லை எனும் விஷயத்தால் நிம்மதியிழந்து உள்ளது. எனவே எங்கு அன்னாரின் இறைவணக்கத்தின் தரம் குறித்து நமக்கு தெரியவருகின்றதோ அங்கு அன்னாரின் பரிசுத்த உள்ளத்தின் நிலையைக் குறித்தும் தெரிய வருகின்றது. அது மனித இனத்தை அழிவிலிருந்து காப்பாற்ற அன்னாரின் உள்ளத்தில் எழுந்தது. அன்னாரின் அந்த வேதனையைக் குறித்து தெரிய வருகின்றது. எனவே எவருடைய உள்ளத்தில் மனித இனத்திற்காக வேதனையின் இந்த நிலை இருக்குமோ அவர் எப்போதாவது அநீதி இழைப்பாரா? நிச்சயமாக இல்லை.

அன்னார் இறைவனை வணங்குவதிலும் அவனது படைப்பினங்களுக்கு தொண்டாற்றுவதிலும் அதற்கான வேதனையில் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் தியாகம் செய்தார்கள். அன்னாரின் இறைவணக்கத்தின் நிலையைக் காண்பதற்கு சில நபித் தோழர்களுக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. ஒரு நபித் தோழர் கூறுகின்றார், நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை தொழும்போது பார்த்தேன். அந்நேரம் உருக்கத்தின் காரணமாக அன்னாரின் உள்ளத்திலிருந்து ஆட்டுரலிலிருந்து வெளிப்படும் சப்தத்தைப்போன்ற சப்தம் வெளிவந்துகொண்டிருந்தது.

(சுனன் அபூதாவூது, கிதாபுஸ் ஸலாத், பாகம் பாபுல் பகா ஃபிஸ் ஸலாத், ஹதீஸ் எண் 904)

இந்த துஆக்கள் என்னவாக இருந்தன? இவை அல்லாஹ்வின் அடைக்கலத்தில் இருப்பதற்கான துஆக்களாக இருந்தன. இவை உம்மத்திற்கான துஆக்களாக இருந்தன. இவை மனித இனத்தை அழிவிலிருந்து காப்பதற்கான துஆக்களாக இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த துஆக்களே அந்த நேரத்திலும் புரட்சியை ஏற்படுத்தின. நூற்றாண்டுகளாக உயிரற்றவர்களாக இருந்தவர்கள் உயிர்பெற்று அல்லாஹ்வை உண்மையாக வணங்குபவர்களாக மாறிவிட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த துஆக்களே ஏற்றுக்கொள்ளப்படும் தகுதியை அடைந்தவாறு இக்காலத்தில் அன்னார் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை இந்த வழிகெட்ட காலத்தில் இஸ்லாத்தை மீண்டும் உயிர்ப்பிக்க அனுப்பின.

எனவே இன்று இது அஹ்மதிகளாகிய நமது பொறுப்பாகும். நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். இறை

சந்நிதியில் இந்த முன்மாதிரியின்படி நடக்க முயற்சி செய்தவாறு நமது சொந்த குறிக்கோள்களுக்காக மட்டுமின்றி அல்லாஹ்வின் ஆட்சியை உலகில் நிலைநாட்டும்படியான சஜ்தாவைச் செய்யவேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் பறக்கவிடுவதற்காக இருக்க வேண்டும். தம்மைத் தாமே அல்லாஹ்வின் உண்மையான அடியாராக ஆக்குவதற்காக இருக்க வேண்டும். மனித இனத்தை தன்னைப் படைத்த இறைவனின் அருகாமையில் கொண்டு வருவதற்காக இருக்க வேண்டும். உலகை அழிவிலிருந்து காப்பதற்காக இருக்க வேண்டும்.

கடமையான மற்றும் கூட்டுத் தொழுகைக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தளவிற்கு முக்கியத்துவம் அளித்தார்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் சொல்ல வேண்டுமென்றால் சிரமம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் இதற்கான இந்த ஒரு சம்பவத்திலிருந்து நன்றாக கணிக்க முடியும். உகது போரின் மாலையில் இரும்பினால் ஆன அம்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வலது தாடையில் துளைத்து உடைந்து விட்டது. அதன் காரணத்தால் அன்னாருக்கு அதிகளவில் இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. அன்னார் காயங்களால் அவதியுற்றார்கள். அதுமட்டுமின்றி 70 நபித்தோழர்களின் உயிர்த்தியாகத்தின் காயம் இதைவிட அதிகமாக துன்பத்தைத் தரக்கூடியதாக இருந்தது. அந்நாளிலும் அன்னார் பாங்கின் ஓசையைக் கேட்டதும் ஃபஜர் தொழுகைக்காக பொதுவான நாட்களில் செல்வதைப்போன்று சென்றார்கள்.

(உஸ்வாயே இன்ஸானே காமிலில் -பக்கம் 84)

அன்னாரின் இந்த செயல்தான் நபித்தோழர்களிடத்திலும் இறை வணக்கத்தின் உயர் தரத்தை நிலைநாட்டிக் காட்டியது.

எனவே இன்று நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். இப்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தின் மூலமாகத்தான் இஸ்லாத்தின் மறுமலர்ச்சி ஏற்படும், நாம்தான் இஸ்லாத்தின் போதனையை மீண்டும் உயிரூட்ட வேண்டும் என்ற முழக்கத்தை நாம் செய்கின்றபோது நமது இறைவணக்கத்தின் தரம் மற்றும் கூட்டுத் தொழுகையின் அதற்கு அருகில்கூட இருக்கின்றதா என்பதைப் பார்க்க வேண்டும். சிறிய சிரமம் பள்ளிவாசலுக்கு செல்லமாலிருக்க சாக்காகி விடுகின்றது. அதிகாலையில் எழுந்து இரண்டு தும்மல் வந்துவிட்டால் இன்று உடல்நிலை சரியில்லை, தொழுகையை வீட்டில் தொழுது கொள்ளலாம் எனக் கூறி விடுகின்றனர். சோம்பல்கள் முயற்சி செய்வதால் நீங்கிவிடுகின்றன.

எனவே நாம் முயற்சி செய்ய வேண்டும். நாமும் நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்த முயற்சி செய்ய வேண்டும். இவை எப்படிப்பட்ட துஆக்கள் என்றால் இவை உலகில் புரட்சியின் அக்காலத்தின் காரணியாக அமையும் நமது தப்லீக் துஆக்களின்றி விளைவற்றதாகும். நமது அறிவாற்றல்கள் துஆக்களின்றி விளைவற்றதாகும். எனவே உலகிற்கு உண்மை இஸ்லாத்தைக் கற்பிக்க வேண்டுமென்றால் எல்லாவற்றிற்கும் முதலாக நாம் இறைவனுடன் இந்தத் தரத்திலான தொடர்பை இணைத்துக் கொள்ள முயற்சி செய்யவேண்டும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் அன்னாரின் உயர் முன்மாதிரியைப் பின்பற்றி நடந்தவாறு நிலைநாட்டியதாகும். அதன் வரைபடத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு வரைந்துள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் அவர்களின் முந்தைய நிலையை இவ்வாறு வரைந்துள்ளது பெரிய விஷயமாகும்.

يَأْكُلُوْنَ كَمَا تَأْكُلُ الْاَنْعَامُ

அதாவது அவர்கள் கால்நடைகள் தின்பதைப் போன்று தின்றுகொண்டு இருக்கின்றனர். (47: 13)

இது அவர்களின் நிராகரிப்பின் நிலையாகும். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய தாக்கமானது அவர்களிடம் தாக்கத்தை உருவாக்கியபோது அவர்களின் நிலை இதுவாக ஆகியது.

يَبِيْتُوْنَ لِرَبِّهِمْ سُجَّدًا وَّ قِيَامًا (25:65)

அதாவது அவர்கள் இறைவனுக்காக சிரம் பணிந்தும், நின்றும் (வணங்கியவர்களாக) இரவுகளைக் கழிப்பார்கள்.

(மல்ஃபூஸாத் பாகம் 9 பக்கம் 145)

எனவே இதுவே அந்த நிலையாகும். இதனை நாமும் நமக்குள் உருவாக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ஃபஜர் தொழுகையின் வேளையில்கூட எழுவதற்கு சோம்பல் படுபவர்களாக இருக்கக்கூடாது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி உயில், இறுதி தூதுச் செய்தி என்னவென்றால், அப்போது அன்னாரின் உயிர் பிரியும் நிலையில் இருந்தது, மூச்சு திணறிக்கொண்டிருந்தது, தொழுகை மற்றும் அடிமையின் உரிமைகளை கவனத்தில் கொள்ளுங்கள் என்தாகும்.

(சுனன் இப்னு மாஜா கிதாபுல் வஸாயா, வ ஹல் அவ்ஸி ரசூலல்லாஹ் ஹதீஸ் எண் 2698)

இதுவே அல்லாஹ்வின் வணக்கத்தின் உரிமையைச் செலுத்துதல் மற்றும் படைப்பினத்தின் உரிமையைச் செலுத்துதலின் அன்னாரின் நிலையாக இருந்தது. இது அந்த இறுதி உயிலாகும். அதனை ஒரு நம்பிக்கையாளர் எப்போதும் முன்னிறுத்திக் கொள்ளவேண்டும். இதுவே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்பதின் குறிக்கோளாகும். இதனை எப்போதும் கண்முன் நிறுத்திக் கொள்ளவேண்டும். சோம்பல்களிலும் உலக ஈடுபாடுகளிலும் மூழ்கி தனது வாழ்வின் குறிக்கோளைக்கூட மறந்து விடக்கூடாது.

அடுத்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தல் உள்ளது. இது தொடர்பாக அன்னாரின் உயர் முன்மாதிரிகள் உள்ளன. அல்லாஹ்வின் இக்கூற்றானது,

وَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۗ وَكَفٰى بِاللّٰهِ وَكِيْلًا

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....

நாம் எல்லாரையும் விட சிறந்தவராகவும், எல்லாரையும் விட மேன்மைமிக்கவராகவும், எல்லாரையும் விட உயர் தகுதியில் இருப்பவராகவும், நாம் இந்த ஆண் மகனையே பார்க்கின்றோம். அவருடைய பெயர் முஹம்மது (ஸல்லல்லாஹி அலைஹி வஸல்லம்).

(சஷ்மயே மஃரிஃபத் – ரூஹானீ கஸாயின், தொகுதி 23, பக்கம் 301–303)

Faizal Hameed Ilahi, Tittacherry

அதாவது மேலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பீராக. அல்லாஹ்வே போதுமான பாதுகாவலன் (4:82)

பிறகு அன்னாரின் வாழ்க்கையின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த முன்மாதிரி நமக்குக் காணக் கிடைக்கின்றது. மாறாக மரணம் நெருங்கும் வேளையிலும் அன்னாருக்கு இந்தப் பொருளின் கவலை இருந்தது. அதாவது சிறிதுகூட அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என சந்தேகம் ஏற்பட்டு விடும் நிலையில் அல்லாஹ்வின் சந்நிதியில் சென்றுவிடக் கூடாது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், என்னிடம் அன்னார் ஏழு அல்லது எட்டு தினார்கள் கொடுத்து வைத்திருந்தார்கள். இறுதி வேளை நெருங்கியபோது கூறினார்கள்:

ஆயிஷாவே! உம்மிடம் தந்துவைத்த அந்த தங்கம் என்னவானது? ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், என்னிடம் உள்ளன என்றேன். அன்னார் கூறினார்கள், ஆயிஷா! அவற்றை தருமம் செய்துவிடு. பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஏதோ வேலையில் ஈடுபடலானார்கள். மீண்டும் அன்னாருக்கு நினைவு திரும்பியபோது அவற்றை தருமம் செய்து விட்டீரா? எனக் கேட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இப்போது செய்யவில்லை என பதிலளித்தார்கள்.

அன்னார் அவர்களை, செல்லுங்கள், உடனே செல்லுங்கள், என்னிடம் எடுத்து வாருங்கள் என அனுப்பி வைத்தார்கள். அன்னார் அந்த தினார்களை வரவழைத்து தமது கைகளில் வைத்து எண்ணினார்கள். பிறகு கூறினார்கள், உலகிலிருந்து விடைபெற்று இறைவனைச் சந்திக்கும் வேளையில் இந்த தினார்கள் அவரிடம் இருக்குமாயின் முஹம்மதிற்கு (ஸல்) தனது இறைவன் மீது என்ன நம்பிக்கை இருக்கும்! பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் அந்த தீனார்களை தருமம் செய்து விட்டார்கள்.

(அத்திப்காதுல் குப்ரா பாகம் 2 பக்கம் 183)

ஆனால் பிறருக்கு அன்னார் இந்த அறிவுரையை வழங்கியுள்ளார்கள் அதாவது நான் அல்லாஹ்வின் நபியும் அன்பிற்குரியவனும் ஆவேன். இது என்னுடனான நடவடிக்கையாகும். அல்லாஹ்வின் மீது நீங்கள் நம்பிக்கையும் வையுங்கள். ஆனால் உங்கள் சந்ததிகளை பிறரிடம் கையேந்தித் திரியும் நிலைக்கு ஆளாகாமல் இருக்க அவர்களுக்காக உங்களிடம் ஏதேனும் செல்வம் இருப்பின் அல்லது தொகை இருப்பின் விட்டுச் செல்லுங்கள். மூன்றில் ஒரு பாகத்தைவிட அதிகமாக உயில் எழுதிவைக்க அனுமதி இல்லை.

(சஹீஹ் புகாரி கிதாபுல் வஸாயா...ஹதீஸ் எண் 2742)

எனவேதான் அல்லாஹ் திருக்குர்ஆனில் வாரிசுமை பற்றிய முறையையும் விரிவாகக் கூறிவிட்டான். ஆனால் அத்துடன் இதனையும் கூறியுள்ளார்கள், ஆதமின் மகனின் உள்ளத்தில் ஒவ்வொரு களத்திலும் ஒரு கோணல் (உலக ஆசை) உள்ளது. ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஒரு கோணல் உள்ளது ஒரு சாய்வு உள்ளது. எவரது உள்ளம் அந்த அனைத்து கோணல்களையும் பின் தொடருமோ, எந்த கோணல் அவரின் அழிவிற்கு காரணமாக அமையுமோ, அல்லாஹ் அவரை பொருட்படுத்த மாட்டான். எவர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பாரோ அவரை அல்லாஹ் அந்த அனைத்து கோணல்களிலிருந்தும் காப்பாற்றி விடுவான்.

(சுனன் இப்னு மாஜா...ஹதீஸ் எண் 4166)

எனவே இஸ்லாம் உலக பணிகளுக்கும் அனுமதி வழங்குகின்றது. ஆனால் இரவு பகலாக செல்வம் ஈட்டுவதிலும் உலக பணிகளில் திளைத்து விடுவதிலிருந்தும் தடுக்கின்றது. அடிப்படையான பொருள் எதன் பக்கம் கவனமூட்டுகின்றது என்றால் அது அல்லாஹ்வை வணங்குவதும் அவன் மீது நம்பிக்கை வைப்பதும் ஆகும். இது நடந்து விடும்போது உலக கஷ்டங்களில் இருந்தும் மனிதன் தப்பித்து விடுகின்றான்.

அன்னார் (ஸல்) அவர்கள் உம்மத்திற்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்குமாறு அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள், நீங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கவேண்டிய முறைப்படி நம்பிக்கை வைப்பீர்களாயின் அவன் உங்களுக்கு நிச்சயமாக விலங்கினங்களுக்கு உணவளிப்பதைப் போன்றே உணவளிப்பான். அவை காலையில் வெறும் வயிற்றுடன் வெளியேறி மாலையில் வயிறு நிரம்பியவாறு திரும்புகின்றன.

(சுனன் இப்னு மாஜா...ஹதீஸ் எண் 4164)

எனவே இவ்விஷயம் நமக்கு இதன் பக்கம் கவன மூட்டக்கூடியதாக இருக்க வேண்டும். அதாவது உணவு அல்லாஹ்வின் புறமிருந்துதான் வருகின்றது. அதனை அடைய நாம் நமது இறைவணக்கத்தை தியாகம் செய்துவிடக்கூடாது. வேலை அவசியம்தான் என்றாலும் அசல் நம்பிக்கை அல்லாஹ்வின் இருப்பின் மீது இருக்க வேண்டும். வேலைக்காக இறைவணக்கத்தை தியாகம் செய்யக்கூடாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நம்பிக்கை தொடர்பாக ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் சம்பவங்களைப் பார்வையிட்டால் இவ்விஷயம் மிகத் தெளிவாகவும் தனித்துவமாகவும் பிரகாசமாகவும் தெரிய வருவதாவது அன்னார் உயர் தரத்தைக்கொண்ட ஒரு வண்ணத்தைக் கொண்டவர்களாகவும் பரிசுத்த உள்ளத்தையுடையவர்களாகவும் இறைவனுக்காக உயிரையே மாய்த்துக் கொள்ளக்கூடியவர்களாகவும் உலகியல் பொருட்கள் மற்றும் அதன் எதிர்பார்ப்புகளிலிருந்து முகந்திருப்பிக் கொள்ளக் கூடியவர்களாகவும் இறைவனிடம் மட்டுமே நம்பிக்கை வைப்பவர்களாகவும் இருந்தார்கள்.

அன்னார் இறைவனின் விருப்பம் மற்றும் திருப்தியில் மூழ்கி மாய்ந்து, ஏகத்துவ அறிவிப்பைச் செய்வதால் என்னென்ன துயரங்கள் என் தலைமீது வரும், இணைவைப்பாளர்களின் கைகளிலிருந்து என்னென்ன துன்பத்தையும் வேதனையையும்

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....

எந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்ளாமலும் அல்லது மார்க்கத்தை விட்டு வெளியேறிய நிலையிலும் தவ்ஹீதில் நிலைத்திருந்து, இறைவன் ஒருவன்; அவனுக்கு இணையில்லை என்பதை அறிந்திருக்கின்றாரோ அவரும் கூட இரட்சிப்பை பெற்றுக் கொள்வார். (ஹகீகத்துல் வஹி பக்கம் 115–118, ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 118–121)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

அனுபவிக்க வேண்டி வரும் எனும் விஷயத்தை சிறிதும் பொருட்படுத்த வில்லை. மாறாக அனைத்து கடுமைகளையும் நெருக்கடிகளையும் சிரமங்களையும் தன் ஆன்மாவின் மீது செலுத்திக் கொண்டவாறு தமது எஜமானின் கட்டளையின்படி செயல்பட்டார்கள். என்னென்ன நிபந்தனை, உழைப்பு, சொற்பொழிவு மற்றும் அறிவுரைகள் கூறப்பட்டதோ அவை அனைத்தையும் நிறைவேற்றினார்கள். எந்த அச்சமூட்டுபவரையும் சிறிதும் பொருட்படுத்த வில்லை.

நாம் உண்மையாகவே கூறுகின்றோம். அனைத்து நபிமார்களின் சம்பவங்களில் இவ்வாறான அபாயகரமான சந்தர்ப்பங்களும் பிறகு இப்படிப்பட்ட ஒரு இறைவனின் மீது நம்பிக்கை வைத்து வெளிப்படையாக இணைவைப்பு மற்றும் படைப்பின வழிபாட்டிலிருந்து தடுக்கக்கூடியவரும் இந்தளவிற்கு எதிரியும் பிறகு இந்தளவிற்கு உறுதியான மற்றும் நிலையான பாதத்தையும் கொண்டிருந்த ஒருவர்கூட நிரூபிக்கப்படவில்லை.

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 2, ரூகானி கஸாயின் பாகம் 1 பக்கம்111-112)

அடுத்து உயர் நல்லொழுக்கத்தின் ஒரு பகுதி நன்றி செலுத்துதலாகும். நமது எஜமானரின் இந்த பகுதியின் உயர் தரத்தின் முன்மாதிரி என்னவாக இருந்தது! அன்னார் (ஸல்) அவர்களுக்கு எந்நேரமும் எவ்வாறு நன்றி செலுத்துவது என்ற தேட்டம் இருந்துகொண்டே இருந்தது. இறைவனுக்கு அனைவரிலும் அதிகமான நன்றி செலுத்தும் அடியானாக ஆக வேண்டும். நபிமொழியில் வருகின்றது, இந்த நோக்கதிற்காக அன்னார் துஆ செய்து வந்தார்கள், என் இறைவா! நீ என்னை உனக்கு நன்றி செலுத்துபவராகவும் அதிகமாக நினைவு கூறக்கூடியவராகவும் ஆக்குவாயாக.

(சுனன் அபூதாவூது... ஹதீஸ் எண் 1510)

மேலும் ஒரு அறிவிப்பில் இந்த வாக்கியம் அதிகப்படியாக வந்துள்ளது, அல்லாஹ்வே! என்னை உனக்கு அனைவரிலும் அதிகமாக நன்றி செலுத்துபவராகவும் உனது அறிவுரையின்படி நடப்பவராகவும் உனது சாசனத்தை நினைவு கூறக்கூடியவராகவும் ஆக்குவாயாக.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல்... ஹதீஸ் எண் 8087..)

என்னவொரு பணிவிற்கான இடமாக உள்ளது! உலகின் அனைவரிலும் அதிகமாக நன்றி செலுத்துபவர் நான் அனைவரிலும் அதிகமாக நன்றி செலுத்துபவராக ஆக வேண்டும் என துஆ செய்கின்றார்கள்.

ஒரு முறை அன்னார் (ஸல்) அவர்கள் ஒரு ரொட்டித்துண்டின் மீது பேரீச்சம் பழத்தை வைத்து உண்டவாறு, இந்த பேரீச்சம்பழம் இந்த ரொட்டியின் குழம்பாகும் எனக்கூறி நன்றி செலுத்தினார்கள்.

(சஹீஹுல் அஸ்ர் வஜமீலுல் அபர் மின் சீரத் கைருல் பஷர் (ஸல்) பாகம் 1 பக்கம் 254..)

இன்றைய நாட்களில் நம்மில் அதினமானவர்களுக்கு உயர்தர உணவும் கிடைக்கின்றது. இருந்தும் ஆயிரம் குறைகள் எழுகின்றன. வீடுகளில் சில விரும்பத்தகாத நிகழ்வுகளும்கூட மனைவி நல்ல உணவு சமைக்கவில்லை என்பதற்காகவே நடந்து வருகின்றன.

அடுத்து மக்கா வெற்றியின்போது அன்னாரின் பணிவும் நன்றி செலுத்துதலின் முன்மாதிரியும் ஒரு உச்சத்தை எட்டிவிட்டது. அறிவிப்பில் வருகின்றது, அன்னார் ஸில் தவா எனும் இடத்தை எட்டியபோது சிகப்பு யமானிய துணியின் தலைப்பாகையை அணிந்தவாறு தமது சவாரியில் நின்று விட்டார்கள். அல்லாஹ் அன்னாருக்கு வெற்றியை வழங்கி எந்தளவிற்கு கண்ணியமளித்துள்ளான் என்பதை நினைத்தவாறு அன்னார் (ஸல்) அவர்கள் பணிவு மற்றும் நன்றியுணர்வால் தமது தலையை எந்தளவிற்கு தாழ்த்தினார்கள் என்றால் பார்ப்பதற்கு அன்னாரின் அருளுக்குரிய முடி சவாரியின் சேனத்தைத் தொட்டு விடுவதைப் போன்று இருந்தது.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 546..)

அடுத்து அன்னாரின் நன்றியுணர்வு மற்றும் நன்றி செலுத்துதலின் ஒரு உயர்வான உதாரணம் கிடைக்கின்றது, மக்காவின் முஸ்லிம்களின் மீது நிராகரிப்பாளர்களின் தரப்பிலிருந்து கொடுமை இழைக்கப்பட்டபோது முஸ்லிம்கள் ஹப்ஷாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தனர். ஹப்ஷாவின் மன்னர் அவர்களுக்கு அடைக்கலம் வழங்கினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நஜ்ஜாஷி மன்னரின் இந்த உபகாரத்தை எப்போதும் நினைவில் வைத்திருந்தார்கள்.

ஒருமுறை நஜ்ஜாஷியின் ஒரு குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபைக்கு வந்தபோது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவர்களை வரவேற்க சுயம் எழுந்து நின்றார்கள். சஹாபாக்கள் கேட்டனர். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்களை வரவேற்க நாங்களே போதும். அவர்களின் விருந்து உபசரிப்பையும் நாங்கள் செய்வோம். வரவேற்பையும் செய்வோம். தாங்கள் ஏன் சிரமம் எடுத்துக் கொள்கின்றீர்கள்? அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள், இந்த மக்கள் நமது நண்பர்களுடன் மிகச்சிறந்த ஒழுக்கத்துடன் நடந்து கொண்டனர். மதிப்புடன் அவர்களை தங்களிடம் வைத்துக் கொண்டனர். எனவே நான் அவர்களின் அந்த உபகாரத்திற்கான நன்றிக்கடனை சுயம் செலுத்த விரும்புகின்றேன்.

(அல் சீரதுல் ஹல்பியா பாகம் 3 பக்கம் 72..)

எனவே இது இங்கு ஹிஜ்ரத் செய்து வந்துள்ள அந்த மக்களுக்கும் படிப்பினையாகும். இந்த அரசாங்கங்கள் நமக்கு இங்கு அடைக்கலம் அளித்து நமக்கான வசதிகளைச் செய்து தந்துள்ளது. அவற்றிற்கு நன்றி செலுத்தியவாறு இந்த நாடுகளின் நன்மைக்காக தமது ஆற்றல்களை பயன்படுத்த வேண்டும். இவற்றிற்கு இஸ்லாத்தின் அழகிய போதனையை அறிவு ரீதியாக மட்டுமின்றி செயல் ரீதியாகவும் காண்பித்து எது உண்மை இஸ்லாம் என்பதைக் கூறுங்கள். எவ்வகையிலும் நஷ்டத்தை நாம் விளைவிக்கக்கூடாது, இவற்றிடமிருந்து தவறான வழியில் பொருளாதார சலுகைகளைப் பெறக்கூடாது,

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....

மனிதன் எதுவரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு ஒன்றிவிட மாட்டானோ அதுவரை ஏகத்துவத்தை அவனால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது அல்லது முழுமையான ஏகத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாது. மேலும் அல்லாஹ்வையும், அவனது விளக்கமான தோற்றத்தை – அதாவது திருக்குர்ஆனைப் புரிந்து கொள்ள முடியாது.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 566 – ஜுமுஆ பேருரை 28.08.1936)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

எந்த ஆதாயத்தையும் பெறக்கூடாது என்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலமாக நமக்கு மார்க்கம் கிடைத்துள்ளது. எவ்வாறு நமக்கு ஒவ்வொரு படைப்பினத்தின் ஆழமான மற்றும் அவற்றின் உயர் தரத்தின் அறிவு கிடைத்துள்ளதோ அதற்கு நன்றியுணர்வின் வெளிப்பாடு இருக்க வேண்டும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இது அல்லாஹ்வின் ஒப்பற்ற அருளாகும். அவன் முழுமையான கொள்கைகளின் வழியை நமக்கு தனது நபி கரீம் (ஸல்) அவர்களின் மூலமாக முயற்சியும் உழைப்புமின்றி காட்டினான். எவ்வித முயற்சியும் உழைப்புமின்றி நமக்கு அவன் நேர்வழியை காண்பித்து விட்டான். உங்களுக்கு இக்காலத்தில் காட்டப்பட்டுள்ள அந்த வழியைவிட்டும் அதிகமான அறிஞர்கள் இப்போதுவரை பேரற்றவர்களாக இருக்கின்றனர். எனவே இறைவனின் இந்த அருள் மற்றும் கொடைக்கு நன்றி செலுத்துங்கள். அந்த நன்றி செலுத்துதல் என்பது இதுவாகும். அதாவது உண்மையான உள்ளத்துடன் சரியான கொள்கைகளுக்குப்பின் இரண்டாம் பாகமாக வரக்கூடிய அந்த நற்செயல்களை செயல்படுத்துவதாகும். தனது செயல் நிலையால் உதவி பெற்று அவன் அந்த சரியான கொள்கைகளில் உறுதியான பாதத்தை வழங்கவும் நற்செயலின் பாக்கியத்தை வழங்கவும் துஆ செய்யவேண்டும்.

(மல்ஃபூஸாத் பாகம் 1 பக்கம் 149-150)

எனவே இதுவே ஒரு அஹ்மதியின் உண்மையான நன்றி செலுத்தும் முறையாகும்.

அடுத்த ஒரு நல்லொழுக்கம், அமானிதத்தைச் செலுத்துதலும் உடன்படிக்கையைப் பேணுதலும் ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِيْنَ هُمْ لِاَمٰنٰتِهِمْ وَعَهْدِهِمْ رٰعُوْنَ

மேலும் அவர்கள் தங்களிடம் (நம்பி) ஒப்படைக்கப்பட்ட பொருள்களையும் தம் உடன்படிக்கைகளையும் பேணிக் காப்பார்கள். (23:9)

எவ்வாறு நாம் இவற்றை நிறைவேற்றுகிறோம் என்பதைப் பார்க்கின்றனர். இதன் உயர்தர அளவு கோலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு நிலைநாட்டி நமக்கு முன்னால் தமது முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள்! அறிவிப்பில் வருகின்றது, இஸ்லாமிய படைகள் கைபரை சுற்றி வளைத்தபோது அந்த நேரத்தில் அங்கு ஒரு யூதத் தலைவரின் கால்நடைகளை மேய்த்து வந்த ஊழியர் ஒருவர் கால்நடைகளுடன் இஸ்லாமிய படைப் பகுதிக்கு வந்துவிட்டார். மேலும் முஸ்லிமாகி விட்டார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் இப்போது முஸ்லிமாகி விட்டேன். நான் இப்போது எந்நிலையிலும் திரும்பிச் செல்ல விரும்ப வில்லை. திரும்பிச் சென்றால் என்மீது கொடுமையும் இழைக்கப்படும். இந்த ஆடுகள் என்னிடம் உள்ளன. இவற்றை இப்போது என்ன செய்வது? இவை யூதரின் மந்தையாகும், இவற்றின் உரிமையாளர் யூதராவார். அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள், அந்த ஆடுகளின் முகத்தை கோட்டையை நோக்கி திருப்பியவாறு விரட்டி விடுவீராக. அவை தானாகவே அவற்றின் உரிமையாளரிடம் சென்றடைந்து விடும். அவ்வாறே நடந்தது. கோட்டைவாசிகள் அந்த ஆடுகளைப் பெற்றுக் கொண்டனர்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 517..)

இதுவே அமானிதத்தைப் பேணுதல் மற்றும் நேர்மையின் அந்த உயர்தர முன்மாதிரியாகும். போரின் சூழல் நிலவுகிறது. எதிரியின் செல்வம் கையில் கிடைக்கின்றது. ஆனால் முஸ்லிமாகியவருக்கு முதல் பாடமாக, ஒரு முஸ்லிமின் அமானிதத்தைப் பேணுதலும் நேர்மையும் மிகவும் உயர்தரத்தைக் கொண்டதாக இருக்கவேண்டும், என அன்னார் வழங்கினார்கள். அந்த செல்வத்தின் மீது உமக்கும் எமக்கும் எந்த உரிமையும் இல்லை. அவற்றை அவற்றின் உரிமையாளரிடம் திருப்பிக் கொடுத்து விடுவீராக. இன்றைய இந்த முன்னேற்றமடைந்த சமூகத்தில் போரின் சந்தர்ப்பத்தில் எங்கும் உலகில் உங்களுக்கு இந்த அளவுகோல் காணக் கிடைக்காது. இஸ்லாத்தின் மீதும் இஸ்லாத்தின் போதனையின் மீதும் ஆட்சேபனை செய்பவர்களே எல்லாரையும்விட அதிகமாக நம்பிக்கை துரோகத்தில் ஈடுபடுகின்றனர்.

அடுத்து உடன்படிக்கையைப் பேணுதலின் நிலை உள்ளது. அன்னார் உடன்படிக்கையைப் பேணிவந்தார்கள் என்பதை எதிரியும்கூட கூறும் நிர்பந்தத்தில் உள்ளனர். ஹெர்குலிஸின் தர்பாரில் அபூசுஃபியானிற்கு, இன்றுவரை அந்த மனிதர் எங்களுடன் உடன்படிக்கையை மீறவில்லை என்பதை ஏற்கவேண்டியது வந்தது.

(சஹீஹ் முஸ்லிம்...ஹதீஸ் எண் 1773)

பிறகு ஹுதைபியா உடன்படிக்கையில் உடன்படிக்கை எழுதப்பட்டபோது ஒரு மனிதர் சங்கிலியால் பிணைக்கப்பட்டு வருகின்றார். அவர் முஸ்லிமாகியதன் காரணத்தால் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தார். அடைக்கலம் வழங்குமாறு கேட்கின்றார். ஆனால் அங்கு நின்று கொண்டிருந்த முஸ்லிமல்லாத அவரின் தந்தை அன்னாரிடம் கூறினார், இப்போது நமக்கிடையேயான உடன்படிக்கை போடப்பட்டுவிட்டது. எங்களைச் சேர்ந்த எந்த நபரும் உங்களுடன் செல்லமாட்டார். எனவே நீங்கள் அவரை உடன் அழைத்துச் செல்ல முடியாது. அவர் உங்களின் அடைக்கலத்தில் வர யாசித்தாலும் சரியே! அந்த மனிதர், அவர்கள் என்னைத் துன்புறுத்த நான் நிராகரிப்பாளர்களிடம் திருப்பி அனுப்பப்படுவேனா? என பெரும் கூச்சலிட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆம்! இப்போது உடன்படிக்கை போடப்பட்டு விட்டது. ஆனால் அந்நேரம் உடன்படிக்கை எழுதப்பட்டுக்கொண்டுதான் இருந்தது. சில நிபந்தனைகள் எழுதப்பட்டிருந்தன. ஆனால்

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....

நாம் நேர்மையுடன் நோக்கும் போது நுபுவ்வத் தொடர்ச்சியில் (இறைத்தூதர் தொடரில்) மிக உயர் தகுதியுடைய, கண்ணியமிக்க நபியாகவும், உயிருள்ள நபியாகவும், இறைவனின் பேரன்புக்குரிய நபியாகவும் ஒருவரையே காண்கிறோம். அவர் நபிமார்களின் தலைவரும் தீர்க்கதரிசிகளில் மிகப் பெருமைக்குரியவரும், அனுப்பப்பட்ட அனைவரின் கிரீடமுமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களேயாவர். (ருஹானீ கஸாயின் தொகுதி 12 சிராஜுல் முனீர் பக்கம் 82)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

கையெழுத்து இடும் முன்பாகவே அன்னார் கூறினார்கள். ஏனென்றால் எழுதப்பட்டுவிட்டது.

எனவே பெரிய குறிக்கோளிற்காகவும் இந்த உடன்படிக்கைக்காகவும் நீர் தியாகம் செய்தாகவேண்டும். எனவே நீர் திரும்பிச் செல்வீராக. ஆனால் அத்துடன் இதனையும் கூறினார்கள், நீர் சிறிது நாட்கள் பொறுமை காப்பீராக. அல்லாஹ் உமக்கு சுதந்திரத்தை பிறப்பிப்பான் எனும் நற்செய்தியை நான் உமக்கு வழங்குகிறேன். அன்னார் கூறினார்கள், இந்த உடன்படிக்கையின் காரணமாக இன்று நான் நிர்பந்தத்தில் உள்ளேன். ஏனென்றால் நாம் உடன்படிக்கையை மீறுவதில்லை.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 504..)

இதுவே அன்னாரின் உடன்படிக்கைகளைப் பேணுவதற்கான அளவு கோலாகும். இன்றைய உலகவாத அரசுகள் அதற்கு அருகில் கூட செல்ல முடியாது. இன்று ஒரு உடன்படிக்கை போடப்படுகிறது. அது நாளை உடைந்து விடுகிறது. ஆனால் இத்துடன் நமது சொந்த உடன்படிக்கைகளின் தரம் எப்படி உள்ளது என நாமும் நம்மை ஆய்வு செய்துகொள்ள வேண்டும். நமது அன்றாட வாழ்க்கையில் நமக்கு சுய முன்மாதிரியைப் பார்க்க வேண்டும். தமது வீட்டு வாழ்க்கையிலும் உடன்படிக்கைகளை பேணுகின்றோமா என தமது முன்மாதிரியைப் பார்க்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டு வாழ்க்கையிலும் உடன்படிக்கையை பேணுவதைப்பற்றி கூறினார்கள், கியாமத் நாளன்று அனைவரிலும் பெரிய நம்பிக்கை துரோகமாக இது கணக்கிடப்படும். அதாவது ஒருமனிதனர் தனது மனைவியுடன் உறவை ஏற்படுத்திக்கொண்டு பிறகு அந்த மனைவியின் அந்தரங்க இரகசியத்தை உலகிற்கு கூறுகிறார்.

(சஹீஹ் முஸ்லிம்... ஹதீஸ் எண் 1437)

இன்றைய நாட்களில் சில மக்கள் இந்த கீழ்தரமான செயலைச் செய்கின்றதை நாம் பார்க்கின்றோம். மிகவும் இழிவான தரங்கெட்ட செயலைச் செய்கின்றனர். நாவினால் மட்டும் மக்களுக்குக் கூறுவதில்லை. மாறாக வாட்ஸ் அப்பிலும் இன்று புழக்கத்தில் உள்ள இன்னும் பிற ஊடகங்களின் மூலமாகவும் ட்விட்டர் மூலமாகவும் இவ்விஷயத்தை பரப்பிக்கொண்டே செல்கின்றனர். இவர்கள் நிச்சயமாக அனைவரையும்விட மிகப்பெரிய நம்பிக்கை துரோகிகளே. அல்லாஹ் இதிலிருந்து தடுத்துள்ளான். ஒருவேளை பிரிந்து சென்றுவிட்டாலும் அப்போதுகூட எவருக்கும் ஒருவர் மற்றவரின் அந்தரங்கத்தை வெளியிடும் உரிமை இல்லை. இது மிகப் பெரிய நம்பிக்கை துரோகமாகும். அல்லாஹ்வின் பிடியின் கீழ் வரக்கூடிய விஷயமாகும். அல்லாஹ் இதுபற்றி நிச்சயம் கேட்பான். எனவே இப்படிப்பட்ட மக்கள் தன்னைப்பற்றி கவலை கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் உடன்படிக்கையைப் பேணுவது தொடர்பாக கூறுகின்றார்கள்:

தங்களின் உள்ளத்தை தூய்மையாக்கிக் கொள்பவர்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்கள்! தங்களின் உள்ளங்களை ஒவ்வொரு வீணானவற்றிலிருந்தும் தூய்மையாக்கிக் கொள்கின்றனர். தங்களின் இறைவனுடன் விசுவாசத்திற்கான உடன்படிக்கை செய்துகொள்கின்றனர். ஏனெனில் அவர்கள் ஒருபோதும் அழிக்கப்பட மாட்டார்கள். இறைவன் அவர்களை இழிவிற்குள்ளாக்குவது சாத்தியமில்லை. ஏனென்றால் அவர்கள் அல்லாஹ்விற்கு உரியவர்கள். அல்லாஹ் அவர்களுக்கு உரியவன். அவர்கள் ஒவ்வொரு சோதனையின் வேளையிலும் காப்பாற்றப்படுவார்கள்.

(கஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் பாகம் 19 பக்கம் 19-120)

இறைவனுடன் குறிப்பான தொடர்பை ஏற்படுத்திக்கொண்டால் பிறகு அல்லாஹ்வின் கட்டளைகளையும் பேணப்படும். வீட்டினருடனான உடன்படிக்கை முதல் வெளியே சமுதாயத்துடனான உடன்படிக்கைவரை இந்த பேணல்கள் இருக்கும். பிற தொடர்புகளைப் அனுசரிப்பதிலும் இந்த பேணல் இருக்கும். வியாபார உடன்படிக்கைகள் மற்றும் உறுதிமொழிகளிலும் இந்த பேணல்கள் இருக்கும். அனைத்து வகையான உடன்படிக்கைகளிலும் இறைவிருப்பத்தை முன்னிறுத்திக் கொண்டவாறு அனைத்துவித நஷ்டத்திலிருந்தும் இன்னும் இதுபோன்ற மக்கள் தப்பித்துக் கொள்பவர்களாக இருப்பார்கள். இறைவனின் கட்டளையின் காரணமாக நாம் உடன்படிக்கைகளைப் பேணுகின்றோம். இதுவே ஒரு உண்மையான அஹ்மதியின் முறையாகவும் உண்மை இஸ்லாத்தின் முறையாகவும் இருக்க வேண்டும்.

அடுத்து பணிவு ஒரு மிகப்பெரிய நல்லொழுக்கமாகும். இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்:

وَعِبَادُ الرَّحْمٰنِ الَّذِيْنَ يَمْشُوْنَ عَلَى الْاَرْضِ هَوْنًا
وَّ اِذَا خَاطَبَهُمُ الْجٰهِلُوْنَ قَالُوْا سَلٰمًا

அதாவது அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னின் (உண்மையான) அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பவராவர். அறிவற்றவர்கள் அவர்களுடன் (அறிவீனமாகப்) பேசினால் அவர்கள் சாந்தி எனக் கூறி(ச்சென்று) விடுவார்கள். (25: 64)

இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரி எ;ன்னவாக இருந்தது? ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனைக் கூறக் கேட்டேன், என்னை அதிகமாக, கிறித்தவர்கள் மரியமின் மகனைப் புகழ்ந்ததைப் போன்று புகழாதீர்கள். நான் அல்லாஹ்வின் அடியான் மட்டுமேயாவேன். எனவே நீங்கள் என்னை அல்லாஹ்வின் அடியார் மற்றும் ரசூல் என்று மட்டுமே கூறுங்கள்.

(சஹீஹ் புகாரி.. ஹதீஸ் எண் 3445)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள், நமது நபிகரீம் (ஸல்) அவர்களைத்தாண்டி உலகில் எந்த முழுமையான மனிதரின் முன்மாதிரியும் இல்லை. எதிர்காலத்தில் கியாமத்வரை இருக்கவும்

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....

எனது மார்க்கம் என்னவென்றால், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை தனியாக வைத்து விட்டு இதுவரை காலஞ்சென்றுபோன ஏனைய நபிமார்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்தது போன்ற பணியையும் சீர்திருத்தத்தையும் செய்ய விரும்பினால் அவர்களால் ஒருபோதும் அவ்வாறு செய்ய முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 420)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

முடியாது. அடுத்து பாருங்கள், எண்ணிலடங்காத அற்புதங்கள் கிடைத்த பிறகும் கூட அன்னாரின் நிலை எப்போதும் பணிவான அடியாரின் நிலையாகவே இருந்தது. மீண்டும் மீண்டும்

اِنَّمَآ اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ (18:111)

அதாவது நான் உங்களைப் போன்ற மனிதனேயன்றி வேறில்லை என்றே கூறி வந்தார்கள். எதுவரையென்றால் ஏகத்துவ கலிமாவில் தம்மை அடியாராக ஏற்பதை ஒரு கட்டாய பாகமாக ஆக்கினார்கள். இதனைத் தவிர்க்கும் முஸ்லிம் முஸ்லிமாக இருக்க முடியாது. சிந்தியுங்கள்! மீண்டும் சிந்தியுங்கள்!! எந்த நிலையில் முழுமையான நேர்வழிகாட்டி அவர்களின் வாழ்க்கை முறை நமக்கு பாடம் கற்பிக்கின்றது! உச்சபட்ச நிலையை அடைந்த பின்பும் அடியார் என்று அழைக்கப்படுவதை கைநழுவ விடவில்லை. வேறு எவரைக் குறித்தும் இவ்வாறு சிந்திப்பதும் இவ்வாறான விஷயங்களை உள்ளத்தில் கொண்டு வருவதும்கூட வீணானதும் பொருளற்றதும் ஆகும்.

(மல்ஃபூஸாத் பாகம் 1 பக்கம் 117-118)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: நீங்கள் உங்கள் சண்டைகளை என்னிடம் கொண்டு வருகின்றீர்கள். நானும் ஒரு மனதரேயாவேன். உங்களில் ஒருவர் தனது சான்றை முன்வைப்பதில் மற்றவரைவிட அதிக திறமைபெற்றவராக இருக்கலாம். நான் என்ன செவியேற்பேனோ அதற்கேற்ப அதிக விஷயங்களைக் கூறும் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கிறேன். எனவே எவருக்கு சாதகமாக நான் எதனை வழங்குகிறேனோ அதனை அந்த சான்றுகளின் அடிப்படையில் வழங்குகிறேன். அது அவருக்கு உரிமையில்லாததாகவும் அவருடைய சகோதரனுக்கு உரியதாகவும் இருக்குமாயின் நான் அவருடைய சகோதரனுடைய உரிமையிலிருந்து அவருக்கு சிறிது வழங்கினால் அவர் அதனைப் பெறவேண்டாம். தீர்ப்பளிக்கப்பட்ட பின்பும் பெறாமல் இருப்பதே ஈமானின் வெளிப்பாடாகும். இப்படிப்பட்ட நிலையில் நான் அவருக்கு நெருப்பின் ஒரு துண்டையே வெட்டி வழங்குகின்றேன்.

(சஹீஹ் புகாரி..ஹதீஸ் எண்: 2680)

தனக்கு சாதகமாக தீர்ப்பைப் பெற்று விடுவீர்கள். ஆனால் அது நெருப்பின் ஒரு துண்டாக இருக்கும். அந்த நெருப்பின் துண்டிலிருந்து தவிர்ந்து கொள்வதில் தான் நன்மை உள்ளது. நரக நெருப்பிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். தெள்ளத் தெளிவாக, என்னுடைய உரிமை இல்லை. வேறு ஒருவருடைய உரிமையாகும் எனக் கூறிவிடுங்கள்.

எனவே எவர்கள் தவறான தீர்ப்பைப்பெற முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்கு பெரும் அச்சத்திற்கான இடமாகும். வீட்டு வாழ்க்கையிலும் அன்னாரின் பணிவு மற்றும் வீட்டினருக்கு உதவி செய்யும் நிலை இதுவாக இருந்தது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் தமது வீட்டினருடன் வீட்டு வேலைகளில் உதவி செய்து வந்தார்கள்.

அன்னார் துணிகளை தாமே துவைத்துக் கொள்வார்கள். வீட்டை துடைப்பத்தால் தூய்மைப்படுத்துவார்கள். தாமே ஒட்டகத்தை கட்டிவந்தார்கள். தண்ணீர் கொண்டுவரும் விலங்குகளுக்கு தீனி போட்டு வந்தார்கள். ஆட்டிலிருந்து தாமே பால் கறப்பார்கள். தமது சொந்த வேலைகளையும் தாமே செய்வார்கள். தொண்டரிடமிருந்து ஏதேனும் பணியைப் பெற்றால் அதில் அவருக்கு உதவியும் செய்து வந்தார்கள். எதுவரையென்றால் அவருடன் இணைந்து மாவையும் ஆட்டுவார்கள். சந்தையிலிருந்து தமது பொருட்களை தாமே சுமந்து கொண்டு வருவார்கள்.

(அஷ்ஷிஃபா பதஃரீஃப் ஹகூகுல் முஸ்தஃபா பக்கம் 176 ஹதீஸ்271, 272, 273.)

இன்றைய நாட்களில் வீடுகளில் சில ஆண்கள் பெரும் ஆணவத்தைக் காட்டுகின்றனர். துணியை நேரத்திற்கு துவைக்கவில்லையென்றால் வீட்டில் பெரும் குழப்பம் எழுந்து விடுகின்றது. இப்போது கைகளால்கூட துவைக்கவேண்டியதில்லை. வாஷிங் மிஷின் வீட்டில் இருக்கின்றது. அவர் தானாகவே வாஷிங் மிஷினில் துணிகளைப்போட முடியும். இருப்பினும் அவ்வளவு சிரமம் எடுக்க வேண்டியதில்லை. துடைப்பத்தால் சுத்தம் செய்யும் நிலை இப்போது இல்லை. எல்லா இடத்திலும் ஹூவெர் உள்ளது. சுலபமாக ஹூவெரைக்கொண்டு சுத்தம் செய்யலாம். ஆனால் அங்கும் கௌரவம் வந்துவிடுகின்றது. இதன் காரணமாக வீடுகளில் குழப்பம் ஏற்படுகிறது. எனவே அஹ்மதியாக இருந்து கொண்டு நாம் நமது முன்மாதிரியைக் காட்டவேண்டும்.

அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வெளிவாழ்க்கையைப் பாருங்கள். அதிலும் அன்னாரின் உயர் முன்மாதிரி ஓர் உதாரணமாக இருக்கின்றது. அவற்றைப்பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஆணவம் உடையவர் அல்லாஹ்வின் அரியாசனத்தில் அமர விரும்புகின்றார். எனவே இந்த தீய ஆணவத்திலிருந்து எப்போதும் அடைக்கலம் தேடுங்கள். இறைவனின் அனைத்து வாக்குறுதிகளும் அது உங்களுடன் இருந்தாலும் சரி, இருப்பினும் நீங்கள் அப்போதும் பணிவை மேற்கொள்ளுங்கள். ஏனென்றால் பணிவை மேற்கொள்பவரே இறைவனுக்கு நேசத்திற்குரியவராக இருக்கின்றார். பாருங்கள் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வெற்றிகள் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால் முந்தைய அனைத்து நபிமார்களிலும் அதற்கான ஒப்பீடு காணக்கிடைக்காது. இருந்தும் அன்னாருக்கு அல்லாஹ் வெற்றிகளை வழங்க வழங்க அன்னார் அதே அளவிற்கு பணிவை மேற்கொண்டே சென்றார்கள்.

ஒருமுறை நடந்த சம்பவம் என்னவென்றால், ஒரு மனிதர் பிடிக்கப்பட்டு அன்னாரிடம் கொண்டுவரப்பட்டார். அன்னார் அவரை மிகவும் பயந்தவராகக் கண்டார்கள். மிரண்டு போயிருந்தார். ஆனால் அவர் அருகில் வந்தவுடன் அன்னார் மிகவும் மென்மையாக அரவணைப்புடன் கேட்டார்கள், நீர் ஏன் இப்படி பயந்து நடுங்குகின்றீர்? இறுதியில் நானும் உம்மைப்போன்ற ஒரு மனிதரேயாவேன். ஒரு மூதாட்டியின் மகனேயாவேன். (மல்ஃபூஸாத் பாகம் 10 பக்கம் 258)

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவு மற்றும் அடக்கத்தைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

வெறுமையான ஷெய்க் தோரணையிலிருந்தும் எல்லையற்ற ஆணவம் மற்றும் பெருமையிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும். பணிவு மற்றும் அடக்கத்தை மேற்கொள்ள

வேண்டும். பாருங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையில் அனைவரைவிடவும் மிகப்பெரியவராகவும் பெரியவராக இருக்க தகுதிபடைத்தவராகவும் இருந்தார்கள். அவர்களின் பணிவு மற்றும் அடக்கத்தின் ஒரு உதாரணம் திருக்குர்ஆனில் உள்ளது.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பார்வையற்ற ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து திருக்குர்ஆன் கற்றுவந்தார். ஒருநாள் அன்னாரிடம் மக்காவின் பெரியவர்களும் நகரின் தலைவர்களும் கூடியிருந்தார்கள். அன்னார் அவர்களுடன் பேச்சில் மூழ்கியிருந்தார்கள். பேச்சில் ஈடுபட்டிருந்ததன் காரணத்தால் தாமதமாகி விட்டாதால் அந்த பார்வையற்றவர் எழுந்து சென்றுவிட்டார். இது ஒரு சாதாரண விஷயம்தான். அல்லாஹ் இதுபற்றி அதிகாரம் இறக்கிவிட்டான். இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது வீட்டிற்குச் சென்று அவரை தம்முடன் அழைத்து வந்து தமது அருளுக்குரிய போர்வையை விரித்து அமர வைத்தார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அசல் விஷயம் என்னவென்றால் எவர்களின் உள்ளத்தில் இறைவன்மீதான கண்ணியம் இருக்குமோ அவர்களுக்கு கட்டாயமாக பணிவுடனும் அடக்கத்துடனுமே இருந்தாகவேண்டியுள்ளது. ஏனென்றால் அவர்கள் அல்லாஹ்வின் தேவைகளற்றவன் எனும் தன்மையிலிருந்து எப்போதும் பரிதவிப்பைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.

அதாவது அதிக அறிவுடைய மக்கள் அதிகமாக அஞ்சி நடக்கின்றனர். ஏனெனில் எவ்வாறு அல்லாஹ் மையப்புள்ளியற்றவனாக இருக்கின்றானோ அவ்வாறே மையப்புள்ளியை சுற்றி வளைப்பவனுமாவான். எவருடைய செயலின் காரணமாகவோ கோபப்பட்டு விட்டால் பிறகு மூச்சுக்காற்றால் அனைத்து பணிக்கூடங்களுக்கும் முடிவு கட்டப்பட்டுவிடும். எனவே இவ்விஷயங்களை சிந்தியுங்கள், இவற்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், செயலாற்றுங்கள். (மல்ஃபூஸாத் பாகம் 10 பக்கம் 343-344)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு என்ன அறிவுரை வழங்கியுள்ளார்களோ அவை நிச்சயமாக எப்போதும் நமக்கு செயல்படுவதற்கு ஆகும். அன்னாரின் எந்தவொரு அறிவுரையும் நிச்சயமாக நம்மை சிந்திக்கத் தூண்டக்கூடிய இருக்கவேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் கூறினார்கள்: உங்களில் எவரும் தமது செயல்களின் காரணமாக ஈடேற்றத்தைப் பெறமுடியாது. சஹாபாக்கள் கேட்டார்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களுமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள், ஆம். நானும் எனது செயல்களின் காரணமாக ஈடேற்றத்தைப் பெறமாட்டேன். ஆனால் அல்லாஹ் என்னை தனது அருளின் நிழலில் ஏந்திக்கொள்வான். பிறகு அன்னார் கூறினார்கள், எனவே நீங்கள் நேராக இருங்கள். வேதத்திற்கு அருகில் இருங்கள். காலையும் மாலையும் மற்றும் இரவு வேளைகளிலும் இறைவணக்கத்தை மேற்கொள்ளுங்கள். நடுநிலையைப் பேணுங்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் பாகம் 3 பக்கம் 753 ஹதீஸ் எண்:10688.)

நடுநிலை அனைத்து விஷயங்களிலும் அவசியமாகும். உலக வி-யங்களில் முந்திச் செல்லாதீர்கள். அல்லாஹ் உலகியலை வரையறுத்து அனுமதித்துள்ளான். ஆனால் நடுநிலை இருக்க வேண்டும். இறைவனை மறந்து விடக்கூடாது. எங்கு அல்லாஹ்வின் வணக்கத்திற்கான உரிமையை செலுத்த வேண்டுமோ அங்கு அதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அதற்கான உரிமை என்னவோ அதனை செலுத்த முயற்சி செய்யுங்கள். ஆனால் உலகியல் அல்லாஹ்வின் உரிமைக்கு போட்டியாக இருக்கக்கூடாது. மார்க்கம் உலகின் மீது எப்போதும் முதன்மையானதாக இருக்க வேண்டும். இது நடக்கும்போது நீங்கள் உங்கள் குறிக்கோளை அடைந்து விடுவீர்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் கருணை உங்களுக்குக் கிடைக்கும். அருள் கிடைத்து விடும். எனவே எங்கு இவ்விஷயத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிவு வெளிப்படுகின்றதோ அங்கு அல்லாஹ்வின் மீதான அச்சமும் பயமும் வெளிப்படுகின்றது. எனது நிலையே இப்படி இருக்கும்போது நீங்கள் எந்தளவிற்கு அல்லாஹ்வை திருப்திபடுத்தி அவனது கருணையை வேண்டும் கவலையில் மூழ்க வேண்டும் என கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் இந்த கருணையும் அருளும்தான் அல்லாஹ்வின் வெகுமதிகளுக்கு வாரிசாக்குகின்றது. எதன் மூலமாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை நாம் அறியமாட்டோம். எனவே அந்த கருணையையும் அருளையும் அடைய தமது இறைவணக்கங்கள் மற்றும் உயர் நல்லொழுக்கங்களின் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

வெளிப்படையான நிலையும் மனிதனின் முகத்தின் அறிகுறிகளும் அவனது நல்லொழுக்கத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றன. இது தொடர்பாக சஹாபாக்கள்ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி எவ்வாறு கூறுகின்றார்கள்? ஹஸ்ரத் பரா பின் ஆரிஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைவரைவிடவும் அழகிய தோற்றமுடையவர்களாகவும் நல்லியல்பைக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள்.

(சஹீஹ் புகாரி கிதாபுல் மனாகிப் பாப் ஸிஃபத்துன்னபி ஹதீஸ் எண் 3549)

மக்கள் மகிழ்ச்சியான தோற்றத்தில் இருந்தால் ஆணவம் பிறந்து விடுகின்றது. அன்னார் (ஸல்) இந்து துஆவைச் செய்து வந்தார்கள்: என் இறைவா! எவ்வாறு எனது தோற்றத்தை அழகியதாக படைத்ததாயோ அவ்வாறே எனது செயல்களையும் அழகானதாக ஆக்குவாயாக.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் பாகம் 8 பக்கம் 288 ஹதீஸ் எண்: 25736.)

நான் இப்போது கூறிய இவை (அன்னாரின்) வாழ்க்கையின் சில பகுதிகளாகும். இவற்றிலிருந்து அன்னார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அழகு ஒளிவீசுகின்றது. ஆனால் பணிவு இதுவாகும், எனது வாழ்க்கையை எனது நல்லொழுக்கத்தை எனது இறைவணக்கத்தின் தரத்தை எப்போதும் நீ உனது படைப்புகளுக்காக விரும்புவாயாக என இறைவனிடம் துஆ செய்கின்றார்கள்.

அடுத்து ஒரு சஹாபி சாட்சி பகர்கின்றார்கள், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைவிட அதிக அழகான வேறு எவருடைய முகத்தையும் பார்த்ததில்லை. சிரித்தவாறு எவரையும் பார்த்ததில்லை. (ஸுனன் திர்மிதி..ஹதீஸ் எண் 3641)

உம்மே மஃபது அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றத்தைக் குறித்து இவ்வாறு கூறுகின்றார்கள்,

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தூரத்திலிருந்து பார்ப்பதற்கு மக்கள் அனைவரைவிடவும் அதிக அழகாக இருந்தார்கள். அருகாமையில் பார்ப்பதற்கு எல்லையில்லாத இனிமையான நாவுடையவர்களாகவும் உயர்ந்த நல்லொழுக்கத்தை உடையார்களாகவும் இருந்தார்கள்.

(முஸ்தத்ரிக் அலல் சஹீஹைன் லில் ஹாகிம் பாகம் 3 பக்கம் 10-11.)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், அன்னார் (ஸல்) மக்கள் அனைவரைவிடவும் பரந்த நெஞ்சைக் கொண்டவர்களாக இருந்தார்கள். பேசும்போது மக்களில் அனைவரையும்விட அதிக உண்மையாளராக இருந்தார்கள். அவர்களில் அனைவரையும்விட அதிக அழகாக இருந்தார்கள். சமூக கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் அனைவரையும்விட அதிக மதிப்புமிக்கவர்களாகவும் மரியாதை மிக்கவர்களாகவும் இருந்தார்கள். (திர்மிதி.... 3638)

அன்னாரின் அழகிய முன்மாதிரியின் அளவற்ற உதாரணங்களும் நல்லொழுக்கத்தின் அளவற்ற முன்மாதிரிகளும் உள்ளன. அன்னாரின் நல்லொழுக்கத்தின் எந்தவொரு பாகத்தையும் எடுத்துப் பாருங்கள். அது அன்னாரில் முழுமையாக காணப்படும். இதுவே முன்மாதிரியாகும். இதனை செயல்படுத்த அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டுள்ளான்.

எனவே நாம் உலகிற்கு இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான முகத்தை காட்டவேண்டுமென்றால் அன்னாரின் முன்மாதிரியின் ஒவ்வொரு பகுதியையும் கண்முன் நிறுத்தியவாறு தமது செயலையும் சொல்லையும் அந்த முகம் காட்ட வேண்டும். அப்போதுதான் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் நுழைந்ததற்கான உரிமையையும் செலுத்த முடியும். அன்னாரை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தைப் பரப்புவதற்காக இக்காலத்தில் அனுப்பியுள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பபட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தை எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்:

ஆம், ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களின் எந்த உயர் நல்லோமுக்கத்தைப் பற்றி திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதோ அது ஹஸ்ரத் மூஸாவை விட ஆயிரம் மடங்கு பெரியதாகும். ஏனெனில் அல்லஹ் கூறுகின்றான், ஹஸ்ரத் காதமுல் அன்பியா (ஸல்) அவர்கள் நபிமார்களிடம் தனித்தனியாகக் காணப்பட்ட அந்த அனைத்து உயர் நல்லொழுக்கங்களின் சங்கமமாக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக அல்லாஹ் கூறினான்:

وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ (68:5)

அதாவது நீர் உயர் நல்லொழுக்கத்தில் நிலைபெற்றுள்ளீர்.

அழீம் எனும் சொல்லுடன் எந்தப்பொருள் புகழப்படுமோ அது அரபி சொல்வழக்கில் அந்தப் பொருளின் உச்சபட்ச சிறப்பை குறிப்பிடுவதாக அமையும். உதாரணமாக இந்த மரம் அழீமானதாகும் என்று கூறப்பட்டால் அதன் பொருள், எதுவரை மரத்திற்கான உயரம், அகலம், ஆற்றல் சாத்தியமோ அவையனைத்தும் அந்த மரம் கொண்டுள்ளது என்பதாகும். இவ்வாறே அந்த வசனத்தின் பொருளாவது, எதுவரை உயர் நல்லொழுக்கம், அழகிய அம்சங்கள் மனித ஆன்மாவிற்கு கிடைக்க முடியுமோ அவை அனைத்து முழுமையான நல்லொழுக்கங்களும் ஒட்டுமொத்தமாக முஹம்மது (ஸல்) அவர்களின் ஆன்மாவில் காணப்படுகிறது. எனவே இந்த புகழ்ச்சி எப்படிப்பட்ட உயர்தரத்தைக் கொண்டது என்றால் இதனைவிட அதிகமாக கூறுவது சாத்தியமில்லை.

(பாராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4, ரூகானி கஸாயின் பாகம் 1 பக்கம் 606 அடிக்குறிப்பின் அடிக்குறிப்பு எண்3)

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்,

அந்த மனிதர் தமது சுயத்திலும் தமது பண்பிலும் தமது நடவடிக்கைகளிலும் தமது செயல்களிலும் தமது ஆன்மீக மற்றும் பரிசுத்த ஆற்றலின் முழு அழுத்தத்தைக் கொண்ட நதியால் முழுமையான அற்புதத்தின் முன்மாதிரியை அறிவுப்பூர்வமாகவும் செயல்ரீதியாகவும் உண்மையாகவும் உறுதியாகவும் காண்பித்தார்கள். முழுமை பெற்ற மனிதர் என அழைக்கப்பட்டார்கள். அந்த மனிதர் அனைவரையும்விட முழுமை பெற்றவராகவும் முழுமை பெற்ற மனிதராகவும் இருந்தார்கள். முழுமையான நபியாக இருந்தார்கள். முழுமையான அபிவிருத்திகளுடன் வருகை தந்தார்கள்.

அதனால் ஆன்மீக உயிர்த்தெழுதலின் காரணத்தால் உலகின் முதல் கியாமத் வெளிப்பட்டது. ஒரு மரணித்த உலகம் அவரின் வருகையால் உயிர்பெற்றது. அந்த வாழ்த்துக்குரிய நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா இமாமுல் அஸ்ஃபியா கதமுல் முர்ஸலீன் ஃபக்ருன்னபிய்யின் ஜனாப் முஹம்மது முஸ்தஃபா ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஆவார்கள். அன்பிற்குரிய இறைவனே! அந்த அன்பிற்குரிய நபியின் மீது உலக ஆரம்பம் முதல் நீ எவர்மீதும் அனுப்பாத அந்த அருளையும் தரூதையும் அனுப்புவாயாக.

இந்த மகத்துவமிக்க நபி உலகில் வந்திருக்காவிட்டால் யூனுஸ், அய்யூப், மஸீஹிப்னு மர்யம், மலாகி, யஹ்யா மற்றும் ஸகரியா போன்று எந்தளவிற்கு சிறிய சிறிய நபி உலகில் வந்தார்களோ அவர்களின் உண்மைத்துவத்திற்கு நம்மிடம் எந்தவொரு சான்றும் இருக்க வில்லை. அனைவரும் (இறைவனுக்கு) நெருக்கமானவர்களாகவும் விருப்பமானவர்களாகவும் இறைவனின் அன்பிற்குரியவர்களாகவும் இருந்தனர். இவர்களும் உலகில் உண்மையாளர்களாக எண்ணப்பட்டது அந்த நபியின் பேருபகாரமாகும்.

(இத்மாமுல் ஹுஜ்ஜத், ரூகானி கஸாயின் பாகம் 8 பக்கம் 308)

அல்லாஹ் நமக்கு வாய்ப்பளிப்பானாக. அந்த முழுமையான நபியின் உம்மத்தில் இணைந்ததற்கான உரிமையை செலுத்துபவர்களாக இருப்போமாக. அந்த அழகிய ஒளிவீசும் முகத்தை உலகிற்கு முன்வைத்து உலகின் இருளை நீக்குபவர்களாக ஆகுவோமாக. அல்லஹ் நமக்கு இதற்கான வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன். இப்போது துஆ செய்யுங்கள்.

×××துஆ×××

(நன்றி-அல்ஃபஸ்ல் இன்டர் நே-னல் 13 ஆகஸ்டு 2019)

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A (ரலி) அவர்களின் எழுத்துக்களிலிருந்து....

தமிழில்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

### ஆரம்ப கால வாழ்க்கை மற்றும் நற்பேறு பெற்ற பிறப்பு

ஆமினாவின் ஒளியின் தோற்றம் வெளிப்படுவதற்கான நேரம் அருகில் வந்துவிட்டது. மேலும் குழந்தை பிறப்பதற்கான நாளும் நெருங்கிவிட்டது. ஆமினா ஷூஅப் பனி ஹாஷிமில் தங்கியிருந்தார்கள். மேலும் தன்னுடைய மரணித்த கணவரின் நினைவை உயிர்ப்பிக்கக்கூடிய குழந்தை உலகத்தில் வர வேண்டும் என்றும் அக்குழந்தை அவர்களுடைய துக்கத்தை அகற்றக்கூடியதாகவும் இருக்க சேவண்டும் என ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆக யானைப்படை சம்பவத்திற்கு 25 நாட்களுக்குப் பிறகு 12 ரபீவுல் அவ்வல் 20 ஆகஸ்ட் 570 ஆம் ஆண்டு, ஒரு புதிய மற்றும் உண்மையான ஆய்வின் அடிப்படையில் ரபீவுல் அவ்வல் 20 ஏப்ரல் 570 ஆம் ஆண்டு திங்கட்கிழமை காலை நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பு நிகழ்ந்தது.

யானைப்படை சம்பவத்தைத் தொடர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பு நிகழ்ந்தது என்பது தனக்குள் இறை செய்தியை கொண்டதாக இருந்தது. எவ்வாறு இறைவன் கஅபாவிற்கு எதிராக இந்த வெளிப்படையான தாக்குதலை ஒன்றுமற்றதாக முறியடித்து விட்டானோ அதேபோன்று இறை மார்க்கத்திற்கு எதிராக பொய் தெய்வங்களின் தலை நசுக்கப்பட வேண்டும் என்ற நேரமும் தற்போது வந்து விட்டது. மேலும் திருக்குர்ஆனில் யானைப்படை தாக்குதல் தொடர்பாக கூறியிருப்பதும் இந்த நோக்கத்திற்காகத்தான் என்பதை வெளிப்படையாக உணர முடிகிறது.

எவ்வாறு இருப்பினும் குழந்தை பிறந்த உடன் ஆமினா அவர்கள் அப்துல் முத்தலிப் அவர்களுக்கு தகவல் அனுப்பினார்கள். அதைக் கேட்டவுடன் மகிழ்ச்சியுடன் ஆமினாவிடம் அவர்கள் வந்தார்கள். ஆமினா அவர்களிடம் அந்த ஆண் குழந்தையை ஒப்படைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

நான் கனவில் இவருடைய பெயர் முஹம்மத் என கண்டேன். அப்துல் முத்தலிப் குழந்தையை தன்னுடைய கைகளில் எடுத்துக் கொண்டு பைத்துல்லாஹ் சென்றார்கள். அதன் பிறகு அந்த குழந்தைக்கு முஹம்மத் என்று பெயர் வைத்தார்கள். அதன் பொருள் மிகவும் புகழுக்குரியவர் என்பதாகும். அதன் பிறகு அந்த குழந்தையை மகிழ்ச்சியுடன் தாயிடம் ஒப்படைத்தார்கள்.

வரலாற்று ஆசிரியர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பு தொடர்பாக பல அதிசயமான சம்பவங்களை எடுத்துக் கூறியுள்ளார்கள். உதாரணமாக, அன்னாரின் பிறப்பின்போது ஈரான் மன்னர் கிஸ்ராவின் அரண்மனையில் அபாயகரமான நிலநடுக்கம் ஏற்பட்டதால் அவருடைய 14 கோபுரங்கள் சாய்ந்து விட்டன என்றும் பாரசீகத்தின் நூறு ஆண்டுகளாக ஒளிவீசிக் கொண்டிருந்த புண்ணிய ஜோதி நிரந்தரமாக அணைந்து விட்டது என்றும் சில ஆறுகள் மற்றும் நீரூற்றுகள் வறண்டு விட்டன என்றும் அன்னாரின் வீட்டிலும் பல வண்ணங்களிலான அற்புதங்கள் நிகழ்ந்தன என்றும் இதுபோன்றவற்றை எழுதியுள்ளார்கள்.

ஆனால் இந்த அறிவிப்புகள் அனைத்தும் பொதுவாக பலவீனமானவை ஆகும். அன்னாரின் பிறப்பின்போது விண்ணில் அதிக நட்சத்திரங்கள் உடைந்த காட்சி அசாதாரணமான முறையில் தென்பட்டது என்ற இந்த உண்மையான சம்பவமும் அறிவிப்புகளில் வந்துள்ளது.

அதேபோன்று அன்னார் பிறக்கும்போது விருத்தசேதனம் செய்யப்பட்டே பிறந்தார்கள் எனவும் அறிவிப்பில் வருகிறது. இது சரியானது என்றால் இதில் ஆச்சரியப்படுவதற்கு எந்தவொரு விஷயமும் இல்லை. ஏனென்றால் சில சமயங்களில் குழந்தைகளுக்கு இதுபோன்ற இயற்கையான விஷயங்கள் நடப்பதை நம்மால் காண முடிகின்றது.

இன்னொரு விஷயமும் அன்னாருக்கு இயற்கையாகவே இருந்தது. அது என்னவென்றால் அன்னாருடைய முதுகின் இடது பக்கத்தில் ஒரு சதைத் துண்டு தூக்கிக் கொண்டிருக்கும். பொதுவாக அது முஸ்லிம்களில் கத்மே நுபுவ்வத் அதாவது நபித்துவத்தின் முத்திரை என்ற பெயரில் பிரசித்தி பெற்றுள்ளது.

### பால்குடி மற்றும் சிறு வயது நாட்கள்

மக்காவாசிகளின் வழக்கம் என்னவென்றால் தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு தாமே பால் கொடுப்பதில்லை. பொதுவாக குழந்தைகளை நகரத்திலிருந்து வெளியில் கிராமப் பெண்களான செவிலியர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள். அதனால் குழந்தைகள் திறந்த வெளி காற்றில் வசித்தவாறு தூய்மையான மொழியை கற்றுக் கொள்வார்கள். மேலும் அவர்களின் உடல்நிலை ஆரோக்கியமாகவும் இருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் ஆரம்பத்தில் அன்னாரின் தாயாரும் பிறகு ஸுவைபிய்யா அவர்களும் பால் கொடுத்தார்கள். ஸவ்பியா அன்னாரின் சிறிய தந்தையான அபூ லஹபின் அடிமை ஆவார்கள்.

அந்த அடிமையை அவர்கள் தன்னுடைய சகோதரரின் மகன் பிறந்த மகிழ்ச்சியில் விடுதலை செய்து விட்டார்கள். இந்த ஸவ்பியா அவர்கள்தான் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கும் பால் கொடுத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையான ஹம்ஸா அவர்கள் இந்த பால்குடி உறவின் மூலமாக அன்னரின் சகோதரராக ஆகிவிட்டார்கள்.

ஸுவைபிய்யா அவர்களின் இந்த ஒரு சில நாள் தொண்டை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் மறந்ததில்லை. எதுவரை ஸுவைபிய்யா அவர்கள் உயிருடன் இருந்தார்களோ அதுவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்கள் அவர்களுக்கு எப்போதும் உதவி செய்து கொண்டே இருப்பார்கள். ஸுவைபிய்யாவின் மரணத்திற்குப் பிறகு கூட அவர்களின் உறவினர்கள் யாரேனும் இருக்கின்றார்களா என கேட்டார்கள். ஆனால் ஸுவைபிய்யா அவர்களுக்கு உறவினர்கள் யாரும் இல்லை என்று தெரிய வந்தது. ஸுவைபிய்யாவிற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாலூட்டக்கூடிய நிரந்தர பொறுப்பை ஹவாஸின் சமுதாயத்தைச் சார்ந்த பனீ ஸஅதின் பெண்மணியான ஹலீமா ஏற்றுக் கொண்டார்கள். ஹலீமா மற்ற பெண்களுடன் இணைந்து மக்காவில் செவிலித்தாய் என்ற முறையில் ஒரு குழந்தையை தேடி வந்தார்கள். ஒரு அனாதைக் குழந்தையை தன்னுடன் எடுத்துச் செல்வதில் ஹலீமாவிற்கு ஆரம்பத்தில் மகிழ்ச்சி இல்லாமல் இருந்தது. ஏனென்றால் தந்தையுள்ள ஒரு குழந்தை ஏதாவது கிடைந்திருந்தால் அங்கிருந்து அதிக செல்வமும் நன்கொடையும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது.

ஆக ஆரம்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தன்னுடன் அழைத்துச் செல்வதில் தயக்கம் காட்டினார்கள். ஆனால் வேறு எந்த குழந்தையும் கிடைக்காத காரணத்தினாலும் மேலும் அவருடன் வந்த அனைத்து பெண்களுக்கும் குழந்தை கிடைத்துவிட்டதனாலும் அவர்கள் வெறும் கையுடன் செல்வதை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தன்னுடன் அழைத்துச் செல்வதே சிறந்தது என எண்ணி அன்னாரை அழைத்துச் சென்றார்கள். எந்த குழந்தையை அவர்கள் தன்னுடன் எடுத்துச் சென்றார்களோ அந்தக் குழந்தையின் நட்சத்திரக் குறி மிகவும் உயர்ந்தது என விரைவிலேயே ஹலீமா அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

அவர்கள் சுயமே இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருவதற்கு முன்பு நாங்கள் மிகவும் நலிவடைந்திருந்தோம். அன்னாரின் வருகையுடன் இந்த நலிவு விசாலமாக மாறிவிட்டது. மேலும் எங்களின் ஒவ்வொரு பொருளிலும் அபிவிருத்தியும் அருளும் தென்பட்டது. ஹலீமாவின் மகனான அப்துல்லாஹ் மற்றும் அவனுடைய மூத்த சகோதரி ஷீமா என்பவளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பால் குடித்து வந்தார்கள். ஷீமாவிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மிகுந்த அன்பு இருந்தது.

இரண்டு வருடங்களுக்கு பிறகு பால் குடியின் காலகட்டம் பூர்த்தியடைந்ததும் வழக்கம்போல் ஹலீமா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மக்காவிற்கு அழைத்து வந்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எந்த அளவுக்கு அன்பு ஏற்பட்டு விட்டது என்றால் ஒருவேளை இதற்கான சாத்தியக்கூறு இருந்திருந்தால் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாயாரிடம் அனுமதி பெற்று மீண்டும் தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று அவர்களின் உள்ளம் விரும்பியது.

எனவே அவர்கள் இன்னும் சிறிது காலம் இந்த குழந்தை என்னிடமே இருக்கட்டும். மேலும் நான் இந்த குழந்தையை எல்லா விதத்திலும் நன்கு கவனித்துக் கொள்வேன் என வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். ஆமினா அவர்கள் முதலில் அனுப்ப மறுத்தார்கள். ஆனால் ஹலீமா அவர்கள் வலியுறுத்தியதனாலும், மக்காவின் சுற்றுச்சூழலை (காற்று மற்றும் நீர்) விட வெளியிலுள்ள சுற்றுச்சூழல் மிகவும் நன்றாக இருக்கும் என கருதி ஆமினா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அந்நாளில் மக்காவின் சுற்றுச்சூழல் மாசடைந்து இருந்தது. மேலும் ஹலீமா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மகிழ்ச்சியுடன் தன்னுடைய இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

அதன் பிறகு நான்கு வயது வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். மேலும் பனு சஅத் கோத்திரத்தைச் சார்ந்த சிறுவர் சிறுமிகளுடன் விளையாடிக் கொண்டே வளர்ந்து வந்தார்கள். குறிப்பாக இந்த கோத்திரத்தின் மொழி தெளிவான மற்றும் விரிவாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இந்த மொழியைத்தான் கற்றார்கள்.

ஹலீமா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். மேலும் அந்த கோத்திரத்தின் அனைத்து மக்களும் அன்பின் பார்வையைக் கொண்டு பார்த்து வந்தார்கள். ஆனால் அவர்களுக்கு நான்கு வயதானபோது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதன் காரணமாக ஹலீமா அச்சத்திற்குள்ளாகி அன்னாரை மக்காவில் கொண்டு வந்து தன் தாயாரிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

இந்த சம்பவம் வரலாற்றில் இவ்வாறு வருகிறது. ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய பால்குடி சகோதரிகளுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். வேறு எந்த பெரிய மனிதர்களும் அவர்களுடன் இல்லை. அப்போது வெந்நிற ஆடை அணிந்த இரண்டு ஆண்கள் தோன்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பிடித்து பூமியில் படுக்க வைத்தார்கள். மேலும் அன்னாருடைய நெஞ்சை தூய்மைப்படுத்தினார்கள்.

இந்த காட்சியை பார்த்த அன்னாரின் பால்குடி சகோதரர் அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் ஓடிச் சென்று தன்னுடைய பெற்றோரிகளிடம், என்னுடைய குரைஷி சகோதரரை இரண்டு மனிதர்கள் பிடித்து அவருடைய நெஞ்சை கிழிக்கின்றார்கள் என்ற செய்தியை அறிவித்தார். இதைக் கேட்டவுடன் ஹாரிஸ்

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....

அவர் இறைவனிடம் எல்லையற்ற அன்பைக் கொண்டிருந்தார். படைப்பினங்களிடம் கொண்டிருந்த எல்லையற்ற இரக்கத்தினால் அவரது உயிரே உருகி விட்டது. அதனால் தான் அவரின் உள்ளத்தின் இரகசியத்தை உணர்ந்த இறைவன் அவருக்கு எல்லா நபிமார்களை விடவும், முன்னவர் பின்னவர் யாவரை விடவும் சிறப்பினை வழங்கினான். மேலும் அவரின் குறிக்கோள்களை அவரது வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். (ஹகீகத்துல் வஹி பக்கம் 115–118, ரூஹானீ கஸாயின் தொகுதி 22, பக்கம் 118–121)

A.Basheer Ahmad, Melapalayam

மற்றும் ஹலீமா அங்கு விரைந்து சென்று பார்த்தார்கள். ஆனால் அங்கு எந்த மனிதரும் இல்லை.

எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயந்த நிலையில் நின்று கொண்டிருந்தார்கள். ஹலீமா அவர்கள் முன்னே சென்று அன்னாரை கட்டியணைத்துக் கொண்டு என்னவாயிற்று என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் கூறி இதையும் கூறினார்கள். அதாவது அந்த மனிதர்கள் என்னுடைய நெஞ்சில் எதையோ தேடி அதை எடுத்து அவர்கள் எறிந்து விட்டார்கள்.

அதன் பிறகு ஹலீமாவும் ஹாரிஸும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தம்முடைய கூடாரத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஹாரிஸ் ஹலீமாவுடன் இந்த சிறுவனுக்கு ஏதோ ஆகிவிட்டது என நான் அஞ்சுகிறேன். ஆக இவனை உடனடியாக அழைத்துச் சென்று அவருடைய தாயாரிடம் ஒப்படைத்து விட்டு வா என்று கூறினார். ஆகையால் ஹலீமா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மக்காவிற்கு அழைத்து வந்து அன்னாருடைய தாயாரிடம் ஒப்படைத்தார்கள். ஆமினா அவசரத்திற்கான காரணத்தைக் வலியுறுத்திக் கேட்டதனால் ஹலீமா இந்த அனைத்து சம்பவங்களையும் கூறினார்கள். மேலும் இந்த சிறுவன் ஜின்னுடைய தாக்கத்தின்கீழ் வந்து விட்டானோ என்ற அச்சத்தையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

இதைக்கேட்ட ஆமினா அவர்கள் அவ்வாறு ஒருபோதும் நடக்காது என கூறினார்கள். என்னுடைய மகன் மிகவும் மகத்துவமானவன். இவன் கருவில் இருக்கும்போது நான் என்ன கண்டேன் என்றால் எனக்குள் இருந்து ஒளி வெளியேறியது. அந்த ஒளியானது நாடு முழுவதிலும் பரவிச் சென்றது. இந்த சம்பவத்தை உறுதிப்படுத்தும் வகையில் சஹீஹ் முஸ்லிமில் ஒரு அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (தமது சிறு வயதில்) சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து நபியவர்களைப் பிடித்துப் படுக்க வைத்து அவர்களின் நெஞ்சைத் திறந்து இருதயத்தை வெளியில் எடுத்தார்கள். ஓர் (சதைத்) துண்டை வெளியில் எடுத்து, இதுதான் உம்மிடமிருந்த ஷைத்தானுடைய பங்கு என்று ஜிப்ரீல் கூறினார்.

பிறகு ஒரு தங்கத் தாம்பூலத்தில் இதயத்தை வைத்து ஸம்ஸம் தண்ணீரால் அதைக் குழுவினார். பின்னர் முன்பு இருந்த இடத்தில் இதயத்தைப் பொருத்தினார். (நபியவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த) அந்த சிறுவர்கள் நபியவர்களின் செவிலித் தாயிடம் ஓடிச் சென்று, முஹம்மத் கொல்லப்பட்டு விட்டார் என்று கூறினர். குடும்பத்தார் நபியவர்களை நோக்கி வந்தபோது (அச்சத்தால்) நபியவர்கள் நிறம் மாறிக் காணப்பட்டார்கள்.

சஹீஹ் முஸ்லிமின் இந்த நம்பகத்தன்மைக்கு பிறகு இப்னு ஹிஷாமின் அறிவிப்பு எப்படிப்பட்ட வலிமையைப் பெற்று விடுகிறது என்று சொன்னால் அதை வலிமை வாய்ந்த ஆதாரமின்றி நாம் பலவீனம் என்று கூறி ரத்து செய்துவிட முடியாது. இந்த சம்பவம் ஒரு (கஷ்ஃப்) ஆன்மீக காட்சி என்பது வெளிப்படையாக விளங்குகின்றது. நெஞ்சு பிளக்கப்படுதிலின் அடையாளங்கள் அழிந்து போகுதல் அதாவது அந்நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செவிலித்தாய் மற்றும் அங்கிருந்தவர்களுக்கு அதற்கான வெளிப்படையான அடையாளங்கள் தென்படாதது ஆகியவை ஓர் ஆன்மீக காட்சி என்பதை வெளிப்படுத்துகின்றது. எதுவரை என்றால் அதனுடைய வட்டம் பிற சிறுவர்கள் மீதும் படர்ந்துவிட்டது.

மேலும் இந்த ஆன்மீக காட்சிக்குள்ளேயே இறைவனின் வானவர் மனித வடிவில் தோன்றி ஆன்மீக காட்சியில் அன்னாரின் நெஞ்சைப் பிளந்து எடுத்தார்கள் என்று மிகவும் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. சஹீஹான ஹதீஸ்களிலிருந்தும் மிஃராஜின் இரவிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இதேபோன்று நெஞ்சை பிளக்கக்கூடிய சம்பவம் நடந்தது என்றும் மேலும் வானவர்கள் அன்னாரின் நெஞ்சை வெளியில் எடுத்து தூய்மையான ஸம்ஸம் தண்ணீரைக் கொண்டு அதைக் கழுவி பின்னர் அதை மீண்டும் அதே இடத்தில் பொருத்தி விட்டார்கள் என்பதும் நிரூபணமாகிறது.

இந்த இடத்தில் இதை கூறுவதும் சரியாகவே இருக்கும். அதாவது சர் வில்லியம் மியூர் இந்த சம்பவத்தைப் பற்றி கூறியவாறு நவூதுபில்லாஹ் இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வலிப்பு நோயால் நேர்ந்தது என முரணான கருத்தை கூறுகிறார். நாம் யாருடைய நாவையும் அடக்க முடியாது. ஆனால் மியூர் சாஹிப் அவர்கள் இந்த ஆட்சேபணையை மிகவும் காழ்ப்புணர்ச்சியுடன் செய்துள்ளார்கள். ஏனென்றால் முதலாவதாக அனைவரும் அறிந்ததுபோன்று வலிப்பு நோய் உள்ள னிைதரின் மூளை மிகவும் பலவீனமானதாக இருக்கும். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக அன்னார் மிகவும் வலிமை வாய்ந்த உடலுக்கு உரிமையாளராக இருந்தார்கள் என்பதை சுயமே ஒப்புக் கொள்கிறார். அதேபோன்று இந்த அறிவிப்பின் மூலமும் இந்த ஆட்சேபணை ரத்து செய்யப்படுகிறது.

அறிவிப்பில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அந்த காட்சியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பால்குடி

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து....

நான் நபிமார்களுக்கு மதிப்பு மற்றும் கண்ணியம் அளிப்பதை எனது ஈமானின் பகுதியாகக் கருதுகின்றேன். ஆனால், எல்லா நபிமார்கள் மீதும் நபியே கரீம் (ஸல்) அவர்களுக்கு இருக்கின்ற சிறப்பானது எனது ஈமானின் மகத்தான பகுதியாகும். இது எனது நாளங்களில் கலந்து விட்ட விஷயமாகும். அதை வெளியேற்றுவது எனது ஆற்றலில் இல்லை. துர்பாக்கியமுள்ள கண்களில்லாத எதிரி எதை வேண்டுமானாலும் கூறட்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 420 – ரப்வாவில் அச்சடிக்கப்பட்டது)

M.Y. Shahul Hameed, Melapalayam

சகோதரரும் பார்த்துவிட்டு அவர் ஓடிச்சென்று தன்னுடைய பெற்றோர்களிடம் என்னுடைய குரைஷி சகோதரரை இரண்டு மனிதர்கள் பிடித்து அவருடைய நெஞ்சை கிழிக்கிறார்கள் என்ற செய்தியை அறிவித்தார்.

பிற மக்களும் அதேபோன்ற காட்சியை பார்த்தாக சாட்சி கூறத்தக்க அத்தகைய ஒரு வலிப்பு நோயும் உலகில் இருக்கின்றதா? எவருக்கு வலிப்பு நோய் ஏற்படுகின்றதோ அவரை எவரோ பிடித்து பூமியில் தள்ளினார்கள் என்று சுயமே அவர் எண்ணலாம். ஆனால் அதை பார்க்கக்கூடிய மக்களுக்கும் அதேபோன்ற காட்சி தென்படுவது என்பது எப்படிப்பட்ட விஷயமாக இருக்கின்றது என்று சொன்றால் ஒரு காழ்ப்புணர்ச்சி கொண்ட மனிதனைத்தவிர வேறு எவருடைய நாவிலிருந்தும் இதுபோன்ற சொற்கள் வெளிவர முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நான்கு வயது ஆனபோது ஹலீமா அவர்கள் அன்னாரின் தாயாரிடம் கொண்டு வந்து ஒப்படைத்தார்கள். இந்த நான்காண்டு காலம் ஹலீமா அவர்கள் செய்த தொண்டு சாதாரணத் தொண்டல்ல. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறிய சிறிய தொண்டிற்கும் மதிப்பளிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆகையால் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஹலீமாவின் இந்த தொண்டை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நினைவுகூர்ந்து வந்தார்கள். மேலும் அவர்களுடன் எப்போதும் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள்.

இதன் அடிப்படையில் ஒரு முறை மக்காவில் பஞ்சம் ஏற்பட்டபோது அங்கு வந்த ஹலீமா அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 40 ஆடுகளையும் ஒரு ஒட்டகத்தையும் வழங்கினார்கள்.

நபித்துவத்தின் காலத்தில் அவர்கள் ஒரு முறை வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை பார்த்தவுடன் என்னுடைய தாய்! என்னுடைய தாய்! என்று கூறியவாறு எழுந்து நின்று தன் மேல் இருந்த போர்வையை எடுத்து கீழே விரித்தார்கள்.

ஒரு போரின்போது (ஹுனைன் போர்) ஹவாஸின் கோத்திரத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் கைதிகளாக பிடிக்கப்பட்டு கொண்டு வரப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த பால்குடி உறவின் காரணமாகவே அந்த அனைத்து கைதிகளையும் விடுதலை செய்தார்கள். மேலும் அதற்கான ஈட்டுத் தொகையாக ஒரு பைசா கூட அவர்கள் பெறவில்லை. மேலும் அவர்களில் ஒரு கைதியாக இருந்த தன்னுடைய ஒரு பால்குடி சகோதரியையும் விடுதலை செய்து சன்மானங்கள் மற்றும் செல்வங்களைக் கொடுத்து அவர்களை திருப்பி அனுப்பினார்கள்.

ஹலீமா மற்றும் அவர்களின் கணவரான ஹாரிஸ் ஆகிய இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருக்கின்றது. ஆனால் உறுதியான விஷயம் என்னவென்றால், அவர்கள் இருவரும் முஸ்லிம்களாக ஆகிவிட்டார்கள். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நிலையிலேயே மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பால்குடி சகோதரர் அப்துல்லாஹ் மற்றும் பால்குடி சகோதரி ஷீமா ஆகிய இருவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நிலையிலேயே மரணமடைந்தார்கள்.

**அன்னையின் பராமரிப்பும் யஸ்ரபிற்கான (மதீனா) பயணமும்**

ஹலீமா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவர்களின் தாயாரிடம் கொண்டு வந்து ஒப்படைக்கும்போது அன்னாருக்கு ஏறக்குறைய நான்கு வயதாக இருந்தது. அதன் பிறகு அன்னார் தன் தாயின் வளர்ப்பில் இருந்தார்கள். அன்னாருக்கு 6 வயது ஆனபோது தன்னுடைய உறவினரான பனூ நஜ்ஜாரை சந்திப்பதற்காக ஆமினா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் தன்னுடைய அழைத்துக் கொண்டு மதீனா சென்றார்கள்.

ஆமினா அவர்களுக்கு இந்த பயணத்தின்போது தன்னுடைய மரணித்த கணவரின் மண்ணறையையும் பார்க்க வேண்டும் என்ற நோக்கமும் இருந்திருக்கலாம். எவ்வாறிருந்தபோதிலும் ஆமினா அவர்கள் மதீனா சென்றடைந்தார்கள். மேலும் அங்கு ஒரு மாதம் தங்கினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த காலமானது இறுதி வயது வரை நினைவில் இருந்தது. குறைந்தபட்சம் ஐம்பது ஆண்டுகளுக்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், தமது தாயார் தங்கியிருந்த அந்த வீட்டை சஹாபாக்களுக்கு காண்பித்தார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவின் குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடிய அந்த இடத்தையும் காண்பித்தார்கள். மேலும் எங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீச்சல் பழகி வந்தார்களோ அந்த குளத்தையும் காண்பித்தார்கள்.

**தாயாரின் மரணம்**

ஒரு மாதம் தங்கியிருந்த பின்னர் ஆமினா அங்கிருந்து கிளம்பினார்கள். ஆனால் தன்னுடைய கணவரை போன்றே அன்னாரின் மரணமும் வெளிநாட்டிலேயே நிகழ வேண்டும் என விதிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப வழியிலேயே அவர்கள் நோய்வாய்ப்பட்டு அப்வா என்ற இடத்தில் அவர்களின் மரணம் நிகழ்ந்தது. மேலும் அங்கேயே அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

நபித்துவ காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை அந்த இடத்தை கடந்து சென்றபோது தன்னுடைய தாயாரின் மண்ணறையை காணச் சென்றார்கள். மேலும் அதைப் பார்த்து அவர்களின் கண்கள் ஈரமானது. இதைப் பார்த்த சஹாபாக்களும் அழத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம் அல்லாஹ் எனக்கு என்னுடைய தாயாரின் மண்ணறையை தரிசிக்க அனுமதி வழங்கியுள்ளான். ஆனால் அவர்களுக்காக துஆ செய்வதற்கு அனுமதி வழங்கவில்லை என்று கூறினார்கள்.

இதிலிருந்து அன்னாரின் தாயாருக்கு பாவமன்னிப்பு கிடைக்கவில்லை என்று எண்ணிவிடக்கூடாது. ஏனென்றால்

இது அல்லாஹ்வுடன் தொடர்புடைய விஷயமாகும். மேலும் இது தொடர்பாக என்ன நடக்கும்? என்ன நடக்காது? என்பதை நாம் ஒருபோதும் கூற முடியாது. ஆனால் இதிலிருந்து இதை மட்டும் நம்மால் அறிய முடிகின்றது. அதாவது எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எவர் இணை வைக்கின்ற நிலையிலேயே மரணிப்பாரோ அவருக்காக துஆ செய்வது சரியானது அல்ல. மாறாக அவருடைய விஷயத்தை இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும் என கூறியுள்ளார்கள்.

தாயின் மரணத்திற்குப் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்றிலும் அனாதையாக ஆகிவிட்டார்கள். சிறு வயதிலேயே நாட்டைவிட்டு வெகு தூரத்தில் உற்றார் உறவினர்களை விட்டுப் பிரிந்தும், தந்தையும் ஏற்கனவே இறந்து விட்ட அந்த சூழலில் தாயின் பிரிவு ஒரு சாதாரண துயரமாக இருக்க முடியாது. மாறாக இந்த துயரமானது அன்னாருடைய உள்ளத்தில் ஆழ்ந்த மற்றும் நிரந்தரமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

அல்லாஹ் அன்னாரை அனைத்து உலகிற்கும் ஒரு கருணையாளராக அனுப்பியுள்ளான் என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை. ஆனால் வெளிப்படையான காரணிகளின் அடிப்படையில் இந்நிகழ்வுகள் அன்னாரின் இயல்பில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த ஆரம்பகால துயரங்களின் விளைவினால்தான் அன்னாரின் நற்பண்புகளில் ஏழைகளின் மீது நேசம் கொள்ளுதல், துன்பம் அடைந்தவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்ளுதல் ஆகியவற்றில் ஒரு சிறப்புத் தன்மையை மேற்கொண்டார்கள். திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனாதை என்பது தொடர்பாக இந்த வார்த்தைகளில் நினைவு கூர்ந்துள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

اَلَمْ يَجِدْكَ يَتِيْمًا فَاٰوٰى

அதாவது அவன் உம்மை அனாதையாகக் கண்டு (தன் நிழலில் உமக்குப்) புகலிடம் அளிக்கவில்லையா?

وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى

அதாவது அவன் உம்மை (உம் சமுதாயத்திடம் கொண்ட அன்பினால் தம்மையே) இழந்தவராகக் கண்டான். எனவே அவன் (உமக்கு அவர்களைத் திருத்தும்) வழியைக் காட்டினான்.

وَوَجَدَكَ عَآئِلًا فَاَغْنٰى

அதாவது அவன் உம்மைப் பெரும் குடும்பத்தையுடையவராகக் கண்டு செல்வம் நிறைந்தவராக ஆக்கினான்.

فَاَمَّا الْيَتِيْمَ فَلَا تَقْهَرْ

அதாவது எனவே அனாதையை நசுக்கி விடாதிருப்பீராக. (திருக்குர்ஆன் 93:7–10)

### அப்துல் முத்தலிப் அவர்களின் பராமரிப்பு

தாயாரின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய பணிப் பெண்ணான உம்மே அய்மனுடன் மக்கா வந்து சேர்ந்தார்கள். உம்மே அய்மன் என்பவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாயாரின் மரணத்திற்குப் பிறகு அன்னாருக்கு வாரிசாக கிடைத்த பெண் அடிமை ஆவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வளர்ந்து பெரியவரான பிறகு அந்த அடிமைப் பெண்ணை விடுதலை செயததுடன் அவளுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். உம்மே அய்மனின் திருமணத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாரால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஸைது பின் ஹாரிஸா அவர்களுடன் நடத்தி வைத்தார்கள். மேலும் அன்னாரின் வயிற்றிலிருந்து உஸாமா பின் ஸைது அவர்கள் பிறந்தார்கள். உம்மே அய்மன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகும் உயிருடன் இருந்தார்கள்.

ஆக தாயாரின் மரணத்திற்குப் பிறகு உம்மே அய்மன் அவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா வந்தடைந்தார்கள். மேலும் அங்கு அன்னாரை அப்துல் முத்தலிப் அவர்கள் தன்னுடைய பராமரிப்பில் வளர்த்து வந்தார்கள். அப்துல் முத்தலிப் அன்னார் மீது மிகுந்த நேசம் கொண்டிருந்தார்கள். இறை இல்லமான கஃபாவை வலம்வரும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன் தோள்களின் மீது அமர்த்திக் கொள்வார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களுடன் மிகவும் ஒன்றிவிட்டார்கள். புனித கஅபாவின் நிழலில் அப்துல் முத்தலிப் அவர்களுக்கென்று ஒரு விரிப்பு விரிக்கப்பட்டிருக்கும். அவர்கள் வரும் வரை அவர்களது பிள்ளைகள் அந்த விரிப்பைச் சுற்றி அமர்ந்திருப்பார்கள். அவர்களுக்கு மரியாதை செய்யும் விதமாக எவரும் அதில் அமர மாட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் மீது வைத்திருந்த அன்பினால் நேராகச் சென்று அவர்கள் அருகில் அமர்ந்து விடுவார்கள். மேலும் அப்துல் முத்தலிப் பெருமானார் (ஸல்) அவர்களைப் பார்த்து மகிழ்ச்சியடைவார்கள். அன்னாரின் சிறிய தந்தை சில சமயங்களில் அன்னாரை அந்த விரிப்பில் அமர்வதிலிருந்து தடுத்தபோது அப்துல் முத்தலிப் அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒன்றும் கூற வேண்டாம். விட்டுவிடுங்கள் என்று கூறி வந்தார்கள்.

### அப்துல் முத்தலிப் அவர்களின் மரணம்

இந்த அன்பிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நாட்கள் கழிந்து கொண்டிருந்த நேரத்தில் அப்துல் முத்தலிப் அவர்களுக்கு மரண அழைப்பு வந்தது. அன்னாரின் ஜனாஸா எடுத்துச் செல்லும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடன் இருந்தார்கள். மேலும் அழுது கொண்டே இருந்தார்கள். இது சிறு வயதில்

அன்னாருக்கு ஏற்பட்ட மூன்றாவது துக்கம் ஆகும். அப்போது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எட்டு வயது இருக்கும். மேலும் அப்துல் முத்தலிப் அவர்களின் வயதில் மாறுபட்ட அறிவிப்புகள் இருக்கின்றது. அதாவது அவர் இறந்த அந்த வருடத்தில் அவர்களுக்கு வயது 140 ஆக இருந்தது.

பல மனைவிகள் மூலமாக அப்துல் முத்தலிப் அவர்களுக்கு பல குழந்தைகள் பிறந்தன. அவற்றில் மிகவும் பிரசித்தி பெற்ற பெயர்கள் இதுவாகும். ஹாரிஸ், ஸுபைர், அபூதாலிப், அபூ லஹப், அப்துல்லாஹ், அப்பாஸ் மற்றும் ஹம்ஸா ஆவார்கள். இவர்களில் அபூ தாலிப் மற்றும் அப்துல்லாஹ்வின் தாயும் ஒருவரே ஆவார்கள். இதன் காரணமாகவே அப்துல் முத்தலிப் அவர்கள் மரணிக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அபூதாலிப் அவர்களின் பராமரிப்பில் விட்டுச் சென்றார்கள்.

மேலும் அவர்களிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நன்கு பராமரித்தும், கவனித்துக் கொள்ளுமாறும் வலியுறுத்திக் கூறினார்கள். இதன் அடிப்படையில் அந்த நேரத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய சிறிய தந்தையான அபூதாலிப் அவர்களின் பாராமரிப்பில் வளர்ந்து வந்தார்கள்.

சமுதாயப் பணிகளில் அப்துல் முத்தலிப் அவர்களிடம் இருந்து வந்த சிகாயா (தொட்டிகளில் நீரை நிரப்பி அதில் உலர்ந்த திராட்சை மற்றும் பேரீத்தம் பழங்களைப் போட்டு சுவையூட்டி அந்த இனிப்பான நீரை மக்காவிற்கு வருபவர்களுக்கு குடிக்க வழங்குதல்) மற்றும் ரிஃபாதா (குரைஷிகளிடம் ஹஜ்ஜுடைய காலங்களில் வரி வசூலித்து அதன் மூலம் ஹாஜிகளுக்கு விருந்தோம்பல் செய்தல்) போன்ற பணிகளை அவர்கள் தன்னுடைய மூத்த மகனான ஸைத் அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

இந்தப் பணிக்கு அதிகமான தொகை தேவைப்பட்டது. அதன் காரணமாக தன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்டது என கருத்தில் இரண்டு பணிகளையும் அபூதாலிப் அவர்களிடமே ஒப்படைத்து விட்டார்கள். ஆனால் அபூதாலிப் அவர்களும் ஏழை மனிதராவார். அதனால் ரிஃபாதாவின் பணியை பனூ நவ்ஃபில் கோத்திரத்தாரிடம் ஒப்படைத்து விட்டார்கள். மேலும் சிகாயாவின் பணியை செல்வந்தரான அப்பாஸ் அவர்களிடம் அபூதாலிப் அவர்கள் ஒப்படைத்து விட்டார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் இதைக் கூறுவதும் மிகவும் அவசியமாகும். அப்துல் முத்தலிப் அவர்களின் வாழ்நாள் வரை பனூ ஹாஷிம் மிகவும் கண்ணியத்திற்குரியவர்களாகவும் வல்லமை பெற்றவர்களாகவும் இருந்தார்கள். குரைஷி கோத்திரங்களிலேயே தனிப்பட்ட சிறப்பம்சங்கள் கொண்டவர்களாக திகழ்ந்தார்கள்.

அபூதாலிப் அவர்களின் மரணத்திற்குப் பின்பு பனூ ஹாஷிம் கோத்திரத்திலிருந்து அந்த கண்ணியங்களை நிலைபெறச் செய்யக்கூடிய எந்தவொரு நபரும் தோன்றவில்லை. அதன் காரணமாகவே குரைஷிகளின் தலைமைத்துவம் அவர்களின் கையில் இருந்து வெளியேறி விட்டது. மேலும் பனூ ஹாஷிம் அவர்களின் தோழமை கோத்திரமான பனூ உமைய்யா மெல்ல மெல்ல வலுப்பெற்று விட்டது.

### அபூதாலிப் அவர்களின் பராமரிப்பு

அபூதாலிப் அவர்கள் தன்னுடைய தந்தையாரின் அறிவுரைக்கு ஏற்ப பராமரிக்கும் பொறுப்பை மிகவும் நேர்மையாகவும் நல்ல முறையிலும் நிறைவேற்றி வந்தார்கள். மேலும் தன்னுடைய குழந்தைகளை விட மேலாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகவும் அன்புடன் கவனித்து வந்தார்கள். எந்நேரமும் தன்னுடைய கண்களுக்கு முன்னே அவர்களை வைத்திருந்தார்கள். இரவு நேரங்களில் பொதுவாக தன்னுடனேயே அவர்களை உறங்க வைத்து வந்தார்கள்.

### சிரியா தேசத்திற்கான பயணம் மற்றும் துறவி பஹீராவின் சம்பவம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 12 வயதிருக்கும்போது அபூதாலிப் அவர்களுக்கு ஒரு வணிக குழுவுடன் சிரியா நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள நேர்ந்தது. இந்தப் பயணமானது மிகவும் கடுமையானதாகவும் நீண்ட தூரமானதாகவும் இருக்கின்ற காரணத்தினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மக்காவிலேயே விட்டுவிட்டுச் செல்ல அவர்கள் முடிவு செய்தார்கள். ஆனால் இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. எனவே அவர்கள் புறப்படும்போது அன்பின் காரணத்தினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூதாலிப் அவர்களை கட்டி அணைத்து அழ ஆரம்பித்தார்கள். இந்நிலையைக் கண்ட அபூதாலிபின் உள்ளம் பொங்கி எழுந்தது. அதனால் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார்கள்.

சிரியா நாட்டின் தெற்கு பகுதியில் புஸ்ரா என்ற பிரசித்தி பெற்ற ஓர் இடம் இருக்கின்றது. அந்த இடத்தைச் சென்றடைந்ததும் அங்கு ஒரு அதிசயமான நிகழ்வு நடந்தது. அங்கு பஹீரா என்ற பெயருடைய ஒரு கிருத்தவ துறவி இருந்தார். குரைஷியர்களின் வணிகக் கூட்டம் அங்குள்ள குரு மடத்திற்கு அருகில் வந்ததும் அந்த துறவி அனைத்து கற்களும், மரங்களும் சிரம் பணிகின்ற காட்சியை கண்டார்.

இறை வேதங்களில் முன்னறிவித்துள்ளபடி ஒரு நபி தோன்றுவார் என்பதை அந்தத் துறவி அறிந்திருந்தார். இந்த வணிக கூட்டத்தில்தான் அந்த நபி இருக்கின்றார் என்பதையும் அவர் அறிந்து கொண்டார். மேலும் அவருடைய ஞானத்தின் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடையாளங்கண்டு கொண்டு அபூதாலிப் அவர்களிடம் இவர்தான் இந்த நபி என்பதையும் அறிவித்தார். அத்துடன் அபூதாலிப் அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வேதம் வழங்கப்பட்டவர்களின் தீங்குகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்ற அறிவுரையும் செய்தார்.

அறிவு சார்ந்த அறிவிப்புகளின் பார்வையில் இந்த சம்பவத்தின் நம்பகத்தன்மை பலவீனமானதாக இருக்கின்றது. ஆனால் உண்மையிலேயே அப்படிப்பட்ட ஒரு சம்பவம்

நிகழ்ந்திருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. மரங்கள் போன்றவை சஜ்தா செய்தது (சிரம் பணிந்தது) துறவியின் ஓர் ஆன்மீகக் காட்சி என்று புரிந்து கொள்ளலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவத்தை ஒப்பிடும்போது இது ஒன்றும் அசாதாரண விஷயம் அல்ல.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆடு மேய்த்தல்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரியா நாட்டின் பயணத்திலிருந்து திரும்பிய பிறகு வழக்கம்போல் அபூதாலிப் அவர்களுடனேயே தங்கியிருந்தார்கள். அரபு நாடுகளில் பொதுவாக குழந்தைகளை கால்நடைகளை மேய்க்க வைப்பார்கள். இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அச்சமயத்தில் அவ்வப்போது ஆடுகளை மேய்த்து வந்தார்கள். நபித்துவத்தின் காலகட்டத்தின்போது ஆடுகளை மேய்ப்பது நபிமார்களின் சுன்னத் (நடைமுறை) ஆகும். நானும் ஆடுகளை மேய்த்துள்ளேன் என்று அன்னார் கூறினார்கள்.

ஒரு முறை பிரயாணத்தின்போது சஹாபாக்கள் காடுகளில் பெருவிளாம் பழத்தை சேகரித்து உண்ணும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருப்பு பழங்களை தேடிப் பறித்து உண்ணுங்கள். ஏனென்றால் நான் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும்போது எனக்கு ஏற்பட்ட அனுபவத்தில் நான் கூறுகிறேன். கருப்பு நிற பெருவிளாம் பழங்களில்தான் அதிக சுவை இருக்கும் என்று கூறினார்கள்.

**தீமைகளிலிருந்து இறைவனின் பாதுகாப்பை பெறுதல்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் இரவில் ஆடு மேய்க்கும் தன்னுடைய நண்பனிடம், நீ என்னுடைய ஆடுகளை கவனித்துக் கொள். நான் நகரத்திற்குச் சென்று மக்களின் சபைகளை பார்த்து வருகின்றேன் என்று கூறினார்கள். அந்நாட்களில் இரவு நேரங்களில் அனைவரும் எவராவது ஒருவரது வீட்டில் ஒன்று கூட கதைகள் கூறுவது, கவிதைகள் கூறுவது போன்ற செயல்களில் நேரத்தை கழித்து வருவது வழக்கமாக இருந்து வந்தது. சில நேரங்களில் முழு இரவும் இவ்வாறே கழிந்துவிடும். அந்த அளவுக்கு அதிலேயே மூழ்கி விடுவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குழந்தைப் பருவத்தின் ஆர்வத்தினால் அந்த வேடிக்கையை பார்க்கச் சென்றார்கள். ஆனால் இந்த வீணான வேலைகளில் காத்தமுன் நபிய்யீன் அவர்களுக்கு கலந்து கொள்வது விருப்பமாக இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் இடத்திற்கு சென்றார்கள். ஆனால் வழியிலேயே அவர்களுக்கு உறக்கும் வந்த காரணத்தினால் அவர்கள் காலை வரை அங்கேயே உறங்கி விட்டார்கள்.

மற்றொரு முறை மீண்டும் இதன் பக்கம் கவனம் ஏற்பட்டது. ஆனால் மறைவான கை அன்னாரை தடுத்து விட்டது. நபித்துவ காலகட்டத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் என்னுடைய முழு வாழ்நாளிலும் இரண்டு முறை மட்டும்தான் இதுபோன்ற சபைகளில் கலந்து கொள்ள எண்ணினேன். ஆனால் இரண்டு முறையும் நான் தடுக்கப்பட்டேன் என்று கூறினார்கள்.

(சீரத் காத்துமுன் நபிய்யீன் பக்கம் 93)

## பத்ர் பத்திரிகையை நீங்களும் படித்து உங்களது நண்பர்களையும், சகோதரர்களையும் இந்த பத்திரிகையை படிப்பதற்காக கவனமூட்டவும்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் டிசம்பர் 2014 ஆண்டு பத்ர் பத்திரிகையின் சிறப்பு வெளியீட்டின் போது தமது தூதுச் செய்தியை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள் :

இந்த பத்திரிகை ஜமாஅத்தின் ஆன்மீக சீர்திருத்தம் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்டது. மேலும் நமது முன்னோர்கள் நெருக்கடியான சூழ்நிலைகள் இருந்தும் கூட தமது உயிரை அர்ப்பணித்தவாறு இப்பத்திரிகையை தொடர்ந்து இயங்கி வரும்படி செய்துள்ளனர். மேலும் அவர்களுடைய துஆக்கள் மற்றும் தூய முயற்சிகளின் அருளால் தான் இன்று வரை இது தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கின்றது என்ற இவ்விஷயத்தை பத்ர் துறையும், பத்ர் பத்திரிகையின் வாசகர்களும் எப்போதும் இதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் அதிகம் அதிகமான அஹ்மதிகள் இதைப் படிக்க வேண்டும். மேலும் இதிலிருந்து பலன் பெற வேண்டும் என்பதை இவ்விஷயமானது நம்மிடம் எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் தனது அருளால் இந்திய அஹ்மதிகளுக்கு குறிப்பாகவும், மற்ற நாடுகளில் வசிக்கக்கூடிய அஹ்மதிகளுக்கு பொதுவாகவும் இதைப் படிப்பதற்கும், இதனோடு தொடர்புள்ள அருள்களை சேகரிப்பதற்குமான நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஆமீன்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது மிகவும் முக்கியமான மற்றும் எழுச்சியூட்டக்கூடிய இந்த கூற்றுகளுக்கேற்ப, இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவர்களிடம் விரும்பி வேண்டி கேட்டுக் கொள்ளப்படுவது என்னவென்றால்,

ஒவ்வொரு வீட்டிலும் பத்ர் பத்திரிகை படிப்பதை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகும். இதில் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கூற்றுகள் மட்டுமின்றி ஹுஸூர் அவர்களுடைய குத்பா ஜுமுஆ பேருரை மற்றும் சொற்பொழிவுகள் மற்றும் ஹுஸூர் அவர்கள் பல்வேறு நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய அறிக்கைகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றது. இதைப் படிப்பது ஒவ்வொரு அஹ்மதிக்கும் கட்டாயமாகும். அல்லாஹ்வின் அருளால் பத்ர் பத்திரிகை தற்போது ஹிந்தி, வங்காளம், தமிழ், மலையாளம், தெலுங்கு மற்றும் ஒடியா ஆகிய மொழிகளிலும் வெளி வந்து கொண்டிருக்கின்றது.

அஹ்மதிகளில் எவர்கள் தற்போது வரை பத்ர் பத்திரிகையை வாங்கவில்லையோ அவர்கள் பத்ர் பத்திரிகையை தாமும் வாங்கி படிக்க வேண்டும். மேலும் தம்முடைய குழந்தைகள் மற்றும் வீட்டிலுள்ள இதர உறுப்பினர்கள் அனைவரையும் இந்த பத்திரிகையை படிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஹுஸூர் அவர்களின் கூற்றிற்கேற்பே செயல்படும் நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

பத்ர் பத்திரிகை முறையாக கிடைக்கவில்லை என்பது தொடர்பான புகாராக இருந்தாலும் சரி; அல்லது சந்தா செலுத்துவது தொடர்பான விஷயமாக இருந்தாலும் சரி கீழ்க்கண்ட எனது தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

+91 1872 224757 +91 94170 20616

managerbadrqnd@gmail.com

**நவாப் அஹ்மது**

(பத்ர் பத்திரிகையின் மேனேஜர்)

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகச்சிறந்த ரஸூல் என்ற ஒளியில்

சய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)

தமிழில்: மவ்லவி ஜியாவுல் ஹக்

**இந்த கட்டுரை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தஃப்ஸீரே கபீரின் தொகுதி பத்தில் அதிகாரம் அல் கவ்ஸரிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அன்னார் கவ்ஸர் என்பதற்கான விளக்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் உயர்வுகள் பற்றி எடுத்துரைத்துள்ளார்கள். அவை வாசகர்களின் பார்வைக்கு...**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

கவ்ஸர் என்பதன் பொருள் நுபுவ்வத்தின் மேன்மைகள் உயர்தரத்தில் கிடைப்பதும் மேலும் அதிகமாக கிடைப்பதுமாகும். இந்த கருத்தின் விசாலத்திற்கு எவ்வித எல்லையும் இல்லை. இறைவனைத்தவிர யாராலும் இதனை முழுமையாக எடுத்துரைக்க முடியாது. இது தொடர்பாக நாம் முதலில் பார்க்க வேண்டியது அன்னாருடைய வார்த்தைதான். ஏனென்றால் ஒருவருடைய சிறப்புகளைப் பற்றி அறிவதற்கு முதலில் அவருடைய வாதத்தை அறிந்து கொள்வது அவசியமாகும்.

உதாரணமாக, ஒரு மனிதர் நம்மிடம் வந்து நான் பெரிய ஆசிரியர் என்று கூறினால் நாம் அவரிடம் ஆசிரியராக இருப்பதற்கான அனைத்து நிபந்தனைகளும் இருக்கின்றதா? இல்லையா? என்று பார்ப்போம்.

அவரிடம் அந்த விஷயங்கள் மற்றவர்களை விட அதிகமாக தென்பட்டால் நாம் அவரை பெரிய ஆசிரியர்தான் என்று ஏற்றுக் கொள்வோம். ஆனால் ஒருவர் தன்னை பெயரிய ஆசிரியர் எனக்கூறி நாம் அவரிடம் நீங்கள் எந்த எந்த சிறப்புகளை கொண்டுள்ளீர்கள் என்று கேட்டால் அதற்கு அவர் உதாரணமாக நான் அதிகமாக முட்டை போடுவேன் என்று கூறினால் எல்லோரும் அவரை அறிவிலி என்று கருதுவர். அல்லது அவர் நான் அதிகமாக புல்அப்ஸ் செய்வேன் அல்லது நான் அதிகமாக உட்கார்ந்து எழுவேன் என்று கூறினால் அனைவரும் அவரைக் கண்டு சிரிப்பர். ஆனால் அவர் தன்னை நான் மிகப்பெரிய பயில்வான் என்று கூறி மேலும் நான் அதிகமாக சாப்பிடுவேன்; அதிகமாக எடையை தூக்குவேன், அதிகமாக புல்அப்ஸ் செய்வேன்; பலவிதமான உடற்பயிற்சி செய்வேன் என்றால் பிறகு நாம் அவர் சரியாகத்தான் கூறுகிறார் எனலாம்.

அதன் பிறகு நாம் அவரிடம் உமக்கு கென்ட்டினுடைய தத்துவம் தெரியுமா? எனக் கேட்க மாட்டோம். மேலும் நாம் அவரிடம் கென்ட்டின் தத்துவம் தெரியுமா எனக் கேட்டால் அவர் உடனே எனக்கு தத்துவத்துடன் என்ன தொடர்புள்ளது. நான் பயின்வானுக்கான வாதம் செய்யக் கூடியவனாவேன்; தத்துவத்திற்கு அல்ல என்று கூறுவார்.

ஆக முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தன்னை நான் அனைவரை விடவும் உயர்ந்தவன் எனக்கூறும்போது நாம் அன்னாருடைய வாதம் என்னவென்றும், மேலும் யார் யாரெல்லாம் அன்னாருடைய வாதத்துடன் இணைந்துள்ளனர் என்றும் பார்க்க வேண்டும். அதன் மூலம் அவர்களுடன் அன்னாரை போட்டியிடச் செய்து உண்மையில் அன்னார் அனைவரையும் விட மேலானவர்களா? இல்லையா? என்பதை தெரிந்து கொள்ளலாம்.

இந்த கருத்தின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன வாதம் செய்தார்கள் என நாம் பார்த்தோம் என்றால் திருக்குர்ஆனின் இந்த வசனம் நமக்கு தென்படுகிறது.

إِنَّآ أَرْسَلْنَآ إِلَيْكُمْ رَسُولًا ۙ شَاهِدًا عَلَيْكُمْ كَمَآ
أَرْسَلْنَآ إِلَىٰ فِرْعَوْنَ رَسُولًا (73:16)

பொருள்: மக்களே! நாம் உங்களின்பால் ஒருவரை ரஸூலாக ஆக்கி அனுப்பியுள்ளோம். அவர் உங்களின் கண்காணிப்பாளர் ஆவார். அவர் ஃபிர்அவ்னின்பால் மூஸா (அலை) அவர்களை அனுப்பியதை போன்றவராவார்.

உலகில் சென்ற நபிமார்களில் பிரசித்திபெற்றது மூஸா நபியின் நபிமார்களின் தொடராகும். ஹஸ்ரத் கிருஷ்ணன் (அலை) மற்றும் ஹஸ்ரத் ஸ்ரீ ராமர்(அலை) அவர்களை ஏனைய முஸ்லிம்கள் ஏற்பதேயில்லை. நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் நம்மிடம் அவர்களது வரலாறு பாதுகாப்பாக இல்லை. அவர்களது போதனைகள் என்னவாக இருந்தது என்பது பற்றியும், நமக்கு அதன் விளக்கங்கள் பற்றியும் எந்த அறிவும் இல்லை. கீதை என்ற ஒரு நூல் மட்டுமே உள்ளது. அது ஹஸ்ரத் கிருஷ்ணர் (அலை) அவர்களுடன் தொடர்புபடுத்தி கூறப்பட்டுள்ளது. ஆனால் அதிலும்கூட பொதுவான சண்டைகள், வரலாற்று சம்பவங்கள் மட்டுமே உள்ளன. அவர்களின் வாதம் பற்றிய விளக்கம் அதிலிருந்து கிடைப்பதில்லை.

இந்த வகையில் பனீ இஸ்ராயீலின் நபியின் வரலாறு ஓரளவு பாதுகாப்பாக உள்ளது. அவர்களது தலைவராக ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இருந்தார்கள். மேலும் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நீரும் மூஸா போன்ற நபியாவீர் எனக் கூறியுள்ளான்.

அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த இனத்தை சேர்ந்தவர்களாக இருந்தார்களோ அதே இனத்தை சேர்ந்தவராக இருந்தார்கள். ஆக ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு நபித்துவத்தின் எந்த மேன்மைகள் வழங்கப்பட்டனவோ, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மேன்மை அதனை விட அதிகமாக நிரூபணமாகிவிட்டால் உறுதியாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கவ்ஸர் கிடைப்பதும் நிரூபணமாகிவிடும்.

ஏனென்றால் இறைவன் ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) ஆகிய இருவரும் ஒரே வகையை சேர்ந்தவர்கள்; மேலும் அன்னாரது மேன்மைகள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மேன்மைகளுடன் ஒப்புமை கொண்டது என்று மட்டும்

கூறவில்லை. மாறாக, அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّآ أَعْطَيْنَٰكَ ٱلْكَوْثَرَ

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது மற்றவர்களை விட அதிகமாகும். அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய மேன்மையும் அன்னாருக்கு கிடைத்துள்ளது. பிறகு அதைவிட அதிகமாக கிடைத்துள்ளது. தற்போது நாம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் என்ன பெரிய பெரிய சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்று பார்ப்போம். அதன் பின்னர் நாம் அதனை பெருமானார் (ஸல்) அவர்களின் சம்பவங்களுடன் ஒப்பிட்டு பார்ப்போம். இதன் மூலம் நாம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் எந்த எந்த வகையிலெல்லாம் கவ்ஸர் வழங்கியுள்ளான் என்பதை நாம் அறியலாம். இந்த வகையில் நாம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நிலைமைகளின் பால் கவனம் செலுத்தினோம் என்றால் நமக்கு தெரிய வருவது என்னவென்றால்,

(1) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இறை வார்த்தைகளை பரப்புவதற்கும், மக்களுக்கு ஆன்மீக அறிவை கற்றுக் கொடுப்பதற்காகவும் வந்தார்கள். இந்த வகையில் பௌதீக அறிவு மிகவும் உதவியாக இருக்கும் என்பது தெளிவான ஒன்று. அறிவை கற்றுக் கொடுப்பது கல்வியறிவு படைத்த மனிதனுக்கு மிகவும் எளிமையானதாகும். இவ்வாறு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் நபியாக ஆக்கப்பட்டபோது அன்னார் கல்வியறிவு படைத்தவராக இருந்தார்கள். இது திருக்குர்ஆன் மற்றும் தவ்ராத் ஆகிய இரண்டிலிருந்தும் நமக்கு தெரிய வருகிறது.

ஆக ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு நபிக்கான பணி கொடுக்கப்பட்டபோது உலக ஆயுதம் அவர்களிடத்தில் இருந்தது. அதாவது அன்னார் கல்வியறிவு படைத்தவர்களாக இருந்தார்கள். தனது பணியை மிகச்சிறந்த முறையில் செய்து முடிக்கக்கூடியவராக இருந்தார்கள். ஆனால் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அதே பணி கொடுக்கப்பட்டபோது அன்னார் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தார்கள். மேலும் கல்வியறிவு பெறாமல் இருந்தும்கூட ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை விட வெற்றியை பெற்றார்கள். இது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மீது பெற்ற ஒரு மிகப்பெரிய மேன்மையாகும்.

(2) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு நபித்துவம் கிடைத்தபோது அல்லாஹ்விடம் இந்த பணி மிகப்பெரியது. என்னால் செய்ய இயலாது. என்னுடன் உதவியாளராக இன்னொரு நபரை நியமிப்பாயாக என்று கூறியவாறு அந்த உதவியாளரும் கூட எனக்கு என்னுடைய உறவினர்களை சார்ந்தவராக இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் உணர்வை பாருங்கள். இறைவனிடமிருந்து அன்னாருக்கு நபித்துவம் என்ற அந்தஸ்து கிடைத்தபோது அன்னார் கூறினார்கள். இந்த பணியை என்னால் செய்ய முடியாது.

இறைவன் அன்னாரிடம் ஒரு பணியை ஒப்படைக்கின்றான். ஆனால் அவர்கள் நிராகரிக்கின்றார்கள். இது ஒரு பணிவாகும் என்று நாம் ஏற்றுக் கொண்டாலும் பணிவிற்கு ஒரு எல்லை வேண்டும். இறைவன் மீண்டும் மீண்டும் நீங்கள் ஃபிர்அவ்னிடம் செல்லுங்கள் என்று கூறுகின்றான். ஆனால் அன்னார் அதனை நிராகரித்தே வந்தார்கள் என்று தவ்ராத்திலிருந்து தெரிய வருகிறது.

அடுத்து அன்னார் தன்னுடைய ஒரு உதவியாளரை வேண்டுவதில் வலியுறுத்துவது மேலும் அவர் தனது குடும்பத்தை சார்ந்தவராகவே இருக்க வேண்டும் எனக்கூறுவது போன்றவை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இறைவனது கட்டளையிருந்தும்கூட தனது பணியில் உலக ரீதியிலான உதவியை நாடினார்கள் என்பது தெரிய வருகிறது.

இதற்கெதிரில் முஹம்மது (ஸல்) அவர்களது நபித்துவத்தின் காலம் எந்தளவு தூரமாக இருந்தது.... ஆனால் அன்னாரது ஞானத்தை பாருங்கள். அன்னாரிடம் மலக்கு வந்தார். அவர் இக்ரா என்று கூறினார். அதன் பொருள்: நீர் படிப்பீராக என்பதாகும். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் எழுதப் படிக்கத் தெரியாதவன் என்றார்கள்.

இதன் பொருள் அன்னார் ஏதோவொரு நூலை படிக்க வேண்டியிருந்தது என்பதல்ல. ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் எந்தவொரு நூலும் இருக்கவில்லை. இந்த நூலை படியுங்கள் என்று கூறுவதற்கு, மேலும் ஒருவர் எவ்வித நூலும் இல்லாமல் வந்து படியுங்கள் என்று கூறினால் இதன் பொருள் நான் என்ன கூறுகின்றேனோ அதனை திரும்ப கூறுங்கள் என்பதாகும்.

மலக்கு நீங்கள் படியுங்கள் என்று கூறியதன் பொருள், மனிதரே! (அந்த நேரத்தில் அன்னார் நபியாகவில்லை) நான் கூறுவதை திருப்பி கூறுவீராக என்பதாகும். ஆனால் அன்னார் நான் எழுதப்படிக்க தெரியாதவன் என்று கூறினார்கள். இதுதான் அன்னாரது பணிவாகும்.

அன்னார் தன்மீது ஏதோ பெரிய பொறுப்பு சுமத்தப்பட உள்ளது என உணர்ந்திருந்தார்கள். மேலும் இறைவன் மாபெரும் மேன்மையாளனாவான். நான் ஒரு எளிய அடியானாவேன். ஒருவேளை என்னால் அந்த பணியை நிறைவேற்ற முடியாமல் போகலாம். ஆகையால்தான் அன்னார் நான் எழுதப்படிக்கத் தெரிந்தவன் அல்லாஹ் எனக் கூறினார்கள். மலக்குகள் மீண்டும் மீண்டும் படியுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அன்னார் எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்று கூறினார்கள். மூன்றாவது முறையாக மலக்கு, படியுங்கள் என்று கூறியதும் அன்னார் படிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இதுதான் பணிவு. ஹஸ்ரத் மூஸா (அலை) போன்று திரும்ப திரும்ப மறுக்கவில்லை. மாறாக, அன்னார் இறைவன் இந்த பணியை என்னிடமே ஒப்படைக்க எண்ணுகிறான் என புரிந்தவுடன் அந்த கட்டளையை ஏற்றுக் கொண்டார்கள்.

அடுத்து அன்னார் எனக்கு ஒரு உதவியாளரை வழங்குவாயாக என வேண்டவில்லை. மாறாக, இறைவனது விருப்பம் இதுவாகவே இருக்கும் பட்சத்தில் இதனை சுமக்க வேண்டுமென்றால் தனியாக நானே சுமப்பேன் என கருதினார்கள். ஆக இதுதான் அன்னாரது அந்தஸ்தை வெளிப்படுத்தக்கூடிய மேன்மையாகும்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு ஒரு சிறிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதும் அன்னார் ஓர் உதவியாளரை வழங்கும்படி கேட்டார்கள். ஆனால் பெருமானர் (ஸல்) அவர்கள்

மீது அதனை விட பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டபோது அதனை தனியாக நானே செய்வேன் என்றார்கள். மேலும் அதனை வெற்றிகரமாக செய்தும் முடித்தார்கள். இது அன்னார் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மீது பெற்ற எவ்வளவு பெரிய மேன்மையாக இருக்கிறது.

(3) ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கிடையில் இருந்த மற்றொரு வித்தியாசம் இதுவாகும். அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் எதிரி அழிந்து போனான். எதிரி அழிந்துபோன பின்னரும் அன்னாருக்கு அந்த நாட்டில் வெற்றி கிடைக்கவில்லை.

சில அறிவில்லாத ஆலிம்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு அந்த நாடு கிடைத்தது எனக் கூறுகின்றனர். ஒரு வசனத்திற்கு தவறாக பொருள் கொடுத்து இவ்வாறு கூறுகின்றனர். ஆனால் அதற்கு எந்த ஆதாரமும் இல்லை. திருக்குர்ஆனிலும் அதற்கான ஆதாரம் இல்லை. பைபிளிலும் அதற்கான ஆதாரம் இல்லை. எகிப்து நாட்டின் மீது அன்னாருக்கு வெற்றி கிடைத்தது என வெறுமனே கூறுவதால் என்ன கிடைக்கும்?

சம்பவம் இவ்வாறு வருகிறது. அதாவது திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகிறது. அவர் பின்னர் காடுகளில் சுற்றித்திரிந்தார். அவர் தான் அடைய வேண்டிய இலக்கை மிக நீண்டகாலம் வரை அடைய முடியாமல் இருந்தார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எதிரிகள் தோல்வியுற்றதும் அன்னார் அந்த நாட்டை கைப்பற்றினார்கள். ஆக இது மூஸா (அலை) அவர்கள் மீது அன்னாருக்கு கிடைத்த மேன்மையாகும்.

(4) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடம் அன்னாரது சமுதாயம் நீரும் உமது இறைவனும் சென்று சண்டையிடுங்கள். நாங்கள் இங்கு அமர்ந்திருக்கின்றோம் என்று கூறினர்.

அப்போது இறைவன் கூறினான். மூஸாவே உமது சமுதாயம் மிகப்பெரிய தவறிழைத்து விட்டது. இந்த குற்றத்திற்காக அவர்களுக்கு நாம் வாக்குறுதி வழங்கிய வெற்றியிலிருந்து தடுக்கின்றோம். நாற்பது ஆண்டுகள் வரை காடுகளில் சுற்றித் திரியுங்கள். தனது பாவங்களுக்கு மன்னிப்பு கோருங்கள். பிறகு அல்லாஹ் உங்களை மன்னிப்பான். இந்த வகையில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்திற்கு நாற்பது ஆண்டுகள் காடுகளில் சுற்றித்திரிந்த பின்னர் கன்ஆன் கிடைத்தது.

ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கு அன்னாரது மரணத்திற்கு 12 ஆண்டுகளிலேயே நாகரீகம் கொண்ட உலகில் ஆட்சி கிடைத்து விட்டது. இதுவும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மீது கிடைத்த எவ்வளவு பெரிய மேன்மையாக உள்ளது.

(5) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த ஒரு முக்கியமான சிறப்பு என்னவென்றால், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய தொடர் முற்று பெற்றுவிட்டது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களுடைய தொடர் ஒருபோதும் முற்றுப் பெறாது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய தொடர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலம் வரை நீண்டு இருந்தது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் காலம் வரை கூட பெயரளவில் இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. இல்லையென்றால் ஈஸா நபி மரணித்த சில ஆண்டுகளிலேயே மக்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை விட பெரியவர் எனக்கூற ஆரம்பித்து விட்டனர். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களின் தொடர் ஒருபோதும் முற்றுப் பெறாது. மறுமை வரை தொடர்ந்து கொண்டே செல்லும்.

(6) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் கடைசி கலீஃபா அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஜமாஅத் அன்னாரை (மூஸா) விட்டு விட்டது. மேலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மேன்மையினை மறுத்துவிட்டது. இதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் நாவிலிருந்து வெளிவந்த பல அர்த்தங்கள் கொண்ட சில வரிகளும் இதற்கு காரணமாகும். இதன் மூலம் அன்னாரது சமுதாயம் ஏமாற்றம் அடைந்தது. மேலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை விட்டு விட்டது. ஆனால் நமது தொடரில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் தொடரில் கடைசியாக வந்த கலீஃபா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏதாவது கூறினார்கள் என்றால் அது இதுவாகும்.... 'அவர்தான் அனைத்தும்; நான் ஒரு பொருட்டே அல்ல. இதுவே தீர்ப்பாகும்'.

அதாவது எனக்கு கிடைத்த அனைத்து மேன்மையும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் அடிமையாக இருந்ததன் விளைவாக கிடைத்ததாகும். நான் அன்னாருக்கு எதிராக நிற்கக்கூடியவன் என கருதாதீர்கள்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) தொடர்பாக அவர் தன்னை இறைவனது மகனாக கூறினார் எனக் கூறப்படுகிறது. ஆனால் நமது ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் கடைசி கலீஃபா அவர்கள் மிகவும் மரியாதையுடன் கூறுகின்றார்கள்... 'அவர்தான் அனைத்தும்; நான் ஒன்றுமே அல்ல. இதுவே தீர்ப்பு ஆகும்'. அதாவது எனக்கு எனது தலைவர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது எவ்வித மேன்மையும் கிடையாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இயற்றிய ஓர் கவிதை உள்ளது. அதன் மீது மக்கள் ஆட்சேபனை செய்கின்றனர். ஆனால் நமக்கு அதில் இன்பம் ஏற்படுகிறது. அன்னார் கூறுகின்றார்கள்:

''இப்னு மர்யத்தின் பேச்சை விடுங்கள். அவரை விட சிறந்தவர் அஹ்மது (ஸல்) அவர்களின் அடிமையாவார்''.

இதன் மீது மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தன்னைத்தானே ஈஸா (அலை) அவர்களை விட மேன்மையானவராக கூறுகின்றார்கள் என ஆட்சேபனை செய்கின்றனர். ஆனால் அன்னார் தன்னை இப்னு மர்யமை விட மேலானவராக கூறவில்லை. மாறாக, அஹ்மது (ஸல்) அவர்களது அடிமையை மேலானவராக கூறுகின்றார்கள்.

இவை இரண்டிற்கும் பெரிய வேறுபாடுகள் உள்ளன. இங்கு அஹ்மது என்பதன் பொருள் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள். மேலும் அன்னார் ஈஸா (அலை) அவர்களை விட முஹம்மது (ஸல்) அவர்களின் அடிமை மேலானவர் ஆவார் எனக் கூறுகின்றார்கள்.

ஆக எவரது அடிமை ஈஸா (அலை) அவர்களைவிட மேலானவர்களாக இருக்கின்றனரோ அவர் சுயம் அவர்களை

விட எவ்வளவு மேலானவராக இருப்பார். இவ்வகையில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மீது முஹம்மது (ஸல்) அவர்களுக்கு இந்த ஒரு சிறப்பும் உள்ளது. அதாவது மூஸா (அலை) அவர்களின் தொடர் கடைசி கலீஃபாவின் ஜமாஅத் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை தனது தொடரின் தோற்றுனரை (மூஸா) விட மேலானவராக ஆக்கிக் கொண்டனர். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களின் கடைசி கலீஃபா அவர்கள் தனது தலைவரின் மகத்துவம் மற்றும் மேன்மையை நிலைநிறுத்தியுள்ளார்கள். அவர்கள் உலகில் உரத்த குரலில் நான் பெற்றதெல்லாம் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளிலிருந்தே பெற்றேன் என அறிவிப்பு செய்தார்கள்.

(7) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு பிறகு எத்தனை நபிமார்கள் வந்தனரோ அவர்கள் அனைவரும் நிலையான நபியாக இருந்தார்கள். புதிய வேதம் எதுவும் கொண்டு வரவில்லை. ஆனால் நபித்துவத்தின் அந்தஸ்தை நேரடியாகப் பெற்றார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மூலம் அல்லாமல் இந்த அந்தஸ்து கிடைத்தது. மூஸாவின் போதனைகள் ஒருவரை நபித்துவத்தின் அந்தஸ்து வரை கொண்டு செல்லக்கூடியதாக இருக்கவில்லை.

ஆனால் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அன்னார் (மூஸா) மீது இந்த மேன்மை கிடைத்திருந்தது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்களை பின்பற்றுதல் (எப்படிப்பட்டதாக இருந்ததென்றால்) அது நபியாக இருந்தாலும் அன்னாரது அருள் மூலமாகவே நபியாகக் கூடியவர்களாக இருந்தனர். மேலும் எது கிடைத்தாலும் அது முஹம்மது (ஸல்) அவர்களின் அருள் மூலமாக கிடைக்கப்பெறும்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை பின்பற்றக்கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு நபித்துவத்தின் அந்தஸ்து நேரடியாக கிடைத்தது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் போதனைகளில் ஒருவரை நபியின் அந்தஸ்து வரை கொண்டு செல்லக்கூடிய சிறப்பு எதுவும் இல்லை. ஆனால் திருக்குர்ஆனில் இந்த சிறப்பு இருக்கின்றது. அதாவது அதன்படி செயல்படக்கூடிய மனிதர்கள் நபித்துவ அந்தஸ்தை கூட அடைய முடியும். ஆனால் அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் கீழும் திருக்குர்ஆனின் சேவகராகவும்தான் இருப்பார்கள்.

(8) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு தடி (அஸா) கிடைத்தது. அது சில சமயம் பாம்பாக மாறியது. அது ஒரு கடிக்கக்கூடிய பொருளாகும். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்ளுக்கு திருக்குர்ஆன் என்ற வாள் கிடைத்தது. அது எப்போதும் அருளாகவே இருக்கிறது.

அல்லாஹ் அந்த வாளை குறித்து திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்: அதாவது நீர் திருக்குர்ஆனை எடுத்துக் கொண்டு இதன் மூலம் ஜிஹாது செய்து கொண்டே செல்வீராக. பௌதீக ரீதியிலான சண்டைகள் சாதாரணமானதாகும். அது விரைவில் முடிவு பெற்றுவிடும். ஆனால் திருக்குர்ஆன் எப்படிப்பட்ட வாள் என்றால் எதிரிகளுக்கு எதிரில் எப்போதும் பயன்படக்கூடியதாகும்.

இதன் காரணமாகவே அன்னாரை மீண்டும் மீண்டும் ரஹ்மத்துல்லில் ஆலமீன் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் அன்னார் போதனைகளையும் கூட எவ்வாறு வழங்கினார்கள் என்றால் அதில் தண்டனை மற்றும் பழிவாங்குதல் போன்வற்றில் மென்மை மற்றும் அன்பு ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் போதனை ஒருவர் உங்களை கன்னத்தில் அடித்தால் நீங்களும் அவரை கன்னத்தில் அடியுங்கள். ஒருவர் உங்களது கண்களை பிடிங்கினார் என்றால் நீங்களும் அவரது கண்களை பிடுங்குங்கள். ஒருவர் உங்களது பல்லை உடைத்தார் என்றால் நீங்களும் அவரது பல்லை உடையுங்கள் என்பதாக இருந்தது.

ஆனால் இஸ்லாம் நீங்கள் எந்த முடிவு எடுத்தாலும் சிந்தித்து சூழ்நிலையை பார்த்து எடுக்க வேண்டும் எனக் கூறுகிறது. அவ்விடத்தில் மன்னிப்பு சிறந்ததாக இருந்தால் எதிரியை மன்னித்து விட வேண்டும். உங்களது நோக்கம் சீர்திருத்தமாக மட்டுமே இருக்க வேண்டும். பழி வாங்குவதாக இருக்கக்கூடாது.

(9) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு யதுபைளாவின் அற்புதம் வழங்கப்பட்டது. அதாவது அன்னாருடைய கை சில சமயங்களில் பிரகாசித்து கொண்டிருந்தது. ஆனால் அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களை சிராஜும் முனீரா அதாவது ஒளியூட்டும் சூரியன் என்று கூறியுள்ளான். சூரியன் முழுவதுமாகத்தான் பிரகாசிக்கும். ஒரு பகுதி மட்டும் பிரகாசிப்பதில்லை.

ஆக ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் கை மட்டும்தான் பிரகாசித்தது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் முழு உடலும் பிரகாசமளிக்கும் ஒளிமிகுந்தும் இருந்தது. மேலும் சூரியன் சில சமயங்களில் மட்டும் ஒளியூட்டாது. மாறாக எப்போதும் ஒளியூட்டும். ஆனால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் கை சில சமயங்களில் மட்டுமே பிரகாசித்தது.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து விஷயங்களிலும் வழிகாட்டியாவார்கள். மேலும் அன்னாரது வழிகாட்டல் சில நேரம் இருந்து சில நேரம் இல்லாமல் என்றில்லாமல் எந்நேரமும் நிலைபெறக்கூடியதாக இருக்கிறது.

(10) ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் பனீ இஸ்ராயீல் மக்களுக்காக மட்டுமே அனுப்பப்பட்டார்கள். ஆனால் முஹம்மது (ஸல்) அவர்கள் தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: அதாவது நாம் உம்மை அனைத்துலக மக்களை ஒரே கையில் ஒன்று சேர்ப்பதற்காக அனுப்பியுள்ளோம்.

இதுவும் அன்னாரது மேன்மை மற்றும் உயர்விற்கான ஒரு பிரகாசமான ஆதாரமாகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 251)

......☆......☆......☆......

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

**எனது தலை அஹ்மது (ஸல்) அவர்களின் காலடி மண்ணில் அர்ப்பணித்து விட்டது. மேலும் எனது உள்ளம் எல்லா நேரமும் முஹம்மது (ஸல்) அவர்களுக்காக அர்ப்பணமாகி விட்டது**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரிகள்

عجب نوریست در جانِ محمدؐ عجب لعلیست در کانِ محمدؐ

முஹம்மது (ஸல்) அவர்களது உயிரில் வியக்கத்தக்க ஓர் ஒளி இருக்கிறது. முஹம்மது (ஸல்) அவர்களின் மகிமையில் வியக்கத்தக்க ஒரு பிரகாசம் தென்படுகின்றது.

عجب دارم دل آں ناکساں را که رُو تابند از خوانِ محمدؐ

முஹம்மது (ஸல்) அவர்களது உணவுத்தட்டிலிருந்தும் முகம் திருப்பிக் கொள்கின்ற அந்த தகுதியற்றவர்களின் உள்ளங்களை வியப்புடன் பார்க்கின்றேன்.

ندانم ہیچ نفسے در دو عالم که دارد شوکت و شانِ محمدؐ

ஈருலகிலும் முஹம்மது (ஸல்) அவர்களைப்போன்று மகிமையையும், மேன்மையையும் கொண்டுள்ள வேறு எவரையும் நான் அறிந்ததில்லை.

خُدا خود سوزد آں کِرمِ دنی را که باشد از عدوّانِ محمدؐ

முஹம்மது (ஸல்) அவர்களது எதிரிகளில் ஒருவராக இருக்கின்ற இழிவான அந்தக் கிருமியை இறைவன் தாமே எரித்து விடுவான்.

اگر خواہی نجات از مستیٔ نفس بیا در ذیلِ مستانِ محمدؐ

நீர் மனதின் இன்பங்களிலிருந்து திளைத்திருப்பதிலிருந்தும் இரட்சிப்பை விரும்புகின்றீர் என்றால் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது பேரன்பு கொண்டவர்களில் ஒருவராக ஆகி விடு.

اگر خواہی که حق گوید ثنایت بشو از دل ثنا خوانِ محمدؐ

இறைவன் உம்மைப் புகழ வேண்டும் என்று நீர் விரும்பினால் முஹம்மது (ஸல்) அவர்களைப் புகழ்பவர்களில் ஒருவராக ஆகி விடு.

اگر خواہی دلیلے عاشقش باش محمدؐ ہست برہانِ محمدؐ

நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் உண்மைக்கான ஆராரத்தைத் தெரிய விரும்பினால் முஹம்மது (ஸல்) அவர்களை மிகவும் நேசிப்பவர்களில் ஒருவராக ஆகி விடுங்கள். ஏனென்றால், முஹம்மது (ஸல்) அவர்களின் உண்மைக்கு ஆதாரம் முஹம்மது (ஸல்) அவர்களே ஆவார்கள்.

سرے دارم فدائے خاکِ احمدؐ دلم ہر وقت قربانِ محمدؐ

எனது தலை அஹ்மது (ஸல்) அவர்களின் காலடி மண்ணில் தன்னை அர்ப்பணித்து விட்டது. மேலும், எனது உள்ளம் எல்லா நேரமும் முஹம்மது (ஸல்) அவர்களுக்காக அர்ப்பணமாகி விட்டது.

دگر اُستاد را نامے ندانم که خواندم در دبستانِ محمدؐ

நான் வேறு எந்தவொரு ஆசிரியரின் பெயரையும் அறிந்ததில்லை. நான் முஹம்மது (ஸல்) அவர்களது பள்ளிக்கூடத்தில் மட்டுமே படித்துள்ளேன்.

اَلا اے دشمنِ نادان و بے راہ بترس از تیغ بُرّانِ محمدؐ

அறிவற்ற மற்றும் வழிகேட்டிலுள்ள எதிரியே! எச்சரிக்கையாக இரு. மேலும் முஹம்மது (ஸல்) அவர்களின் வெட்டுகின்ற வாளுக்கு பயப்படு.

اَلا اے منکر از شانِ محمدؐ ہم از نورِ نمایانِ محمدؐ

எச்சரிக்கையாக இரு! முஹம்மது (ஸல்) அவர்களின் மகிமை மற்றும் பிரகாசிக்கின்ற ஒளியை மறுக்கின்ற நபரே.

کرامت گرچہ بے نام ونشان است بیا بنگر زِ غلمانِ محمدؐ

இப்போது அற்புதங்களைக் காட்டுவது காணாமல் போய் விட்ட ஒன்றாக இருந்தாலும் கூட நீர் அதனைப் பார்க்க விரும்பினால் இப்போது வந்து அந்த அற்புதத்தை முஹம்மது (ஸல்) அவர்களின் அடிமைகளில் காண்பீராக

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
**SUB EDITOR**
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

# Weekly BADAR Qadian

**Qadian - 143516** Distt. Gurdaspur (Pb.) INDIA

Postal Reg.No. GDP-39/2020-2022
Vol.5 Thursday 13 August 2020 Issue No. 33

**MANAGER**
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRITION Rs.500/-



عَنْ اَبِیْ هُرَیْرَةَ رَضِیَ اللّٰهُ عَنْهُ اَنَّ النَّبِیَّ صَلَّی اللّٰهُ عَلَیْهِ وَسَلَّمَ قَالَ

"صَلَاةٌ فِیْ مَسْجِدِیْ هٰذَا

خَیْرٌ مِنْ اَلْفِ صَلَاةٍ فِیْمَا سِوَاهُ اِلَّا الْمَسْجِدَ الْحَرَامَ"

(صحیح بخاری، کتاب فضل الصّلوٰة فی مکة والمدینة)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.
ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
“மஸ்ஜிது ஹராமைத் தவிர எனது இந்தப் பள்ளிவாசலில் அதாவது மஸ்ஜிது நபவியில் ஒரு நேரம் தொழப்படும் தொழுகையானது ஏனைய பள்ளிவாசல்களில் தொழப்படும் தொழுகையை விட ஓராயிரம் மடங்கு சிறந்ததாகும்.”

(சஹீஹ் புகாரி கிதாப் பஸ்லுஸ் ஸலாத்தி ஃபீ மக்கத்தி வல் மதீனத்தி)



Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar.
And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab.
And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad